यूयं धाविष्यथ - நீங்கள் ஓடுவீர்கள்.
सः धाविष्यति - அவன் ஓடுவான்.
तौ धाविष्यतः - அவர்கள் இருவரும் ஓடுவார்கள்.
ते धाविष्यन्ति - அவர்கள் ஓடுவார்கள்.
अहम् अटिष्यामि - நான் சுற்றுவேன்.
आवाम् अटिष्यावः - நாங்கள் இருவரும் சுற்றுவோம்.
वयम् अटिष्यामः - நாங்கள் சுற்றுவோம்.
त्वम् अटिष्यसि - நீசுற்றுவாய்.
युवाम् अटिष्यथः - நீங்கள் இருவரும் சுற்றுவீர்கள்.
यूयम् अटिष्यथ - நீங்கள் சுற்றுவீர்ள்.
सः अटिष्यति - அவன் சுற்றுவான்.
तौ अटिष्यतः - அவர்கள் இருவரும் சுற்றுவார்கள்.
ते अटिष्यन्ति - அவர்கள் சுற்றுவார்கள்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

குறிப்பு

ஸம்ஸ்க்ருதத்தில் வருங்காலத்தைக் காட்டுவதற்காகத் தாதுவுடன் ष्य என்பதைச் சேர்த்துக்கொள்ள வேண்டும். பின்பு நிகழ்கால வினைமுற்றுக்களாகிய मि वः मः முதலியவற்றைச் சேர்த்து உபயோகிக்க வேண்டும். இது போலவே மற்ற தாதுக்களுக்கும் வருங்காலத்தை எழுதிப் பழகிக்கொள்ள வேண்டும்.

रात्रिर्गमिष्यति भविष्यति सुप्रभातं
भास्वानुदेष्यति हसिष्यति पङ्कजश्रीः ।
इत्थं विचिन्तयति कोशगते द्विरेफे
हा हन्त हन्त नलिनीं गज उज्जहार ॥

பதவுரை :- रात्रिः - இரவு, गमिष्यति - போய்விடும், सुप्रभातं - நல்ல காலை, भविष्यति - வரும், भास्वान् - சூரியன், उदेष्यति - உதிக்கும், पङ्कजश्रीः - தாமரையின் அழகு, हसिष्यति - சிரிக்கும், इत्थं - இவ்வாறு, कोशगते - கோசத்திற்குள் இருக்கும், द्विरेफे - வண்டு, विचिन्तयति - நினைக்கும் பொழுது, हा - ஆ, हन्त हन्त - அந்தோ அந்தோ, नलिनीं - தாமரையை, गजः- யானை, उज्जहार - வேறுடன் பிடுங்கி விட்டது.

கருத்து :- நாம் ஒன்று நினைக்க அது ஒழிந்திட்டு வேறு ஒன்று ஆகும்.

Man proposes and God disposes.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

பாடம் - 39

இறந்த காலம் முடிவு பெறாவினைச் சொல் त्वा என்பதில் முடியும் அவ்யயம்

नत्वा	- வணங்கிவிட்டு	गत्वा	- சென்று
नीत्वा	- கொண்டுபோய்	पतित्वा	- விழுந்து
भूत्वा	- இருந்துவிட்டு ஆகி	रक्षित्वा	- காப்பாற்றுவிட்டு
उक्त्वा	- சொல்லிவிட்டு	उषित्वा	- வசித்துவிடு
त्यक्त्वा	- விட்டுவிட்டு	दग्ध्वा	- எரித்துவிட்டு
पक्त्वा	- சமைத்துவிட்டு	मुक्त्वा	- விட்டுவிட்டு
सृष्ट्वा	- படைத்துவிட்டு	स्पृष्ट्वा	- தொட்டுவிட்டு
जित्वा	- ஜயித்துவிட்டு	धावित्वा	- ஓடிவிட்டு
दृष्ट्वा	- பார்த்துவிட்டு	पीत्वा	- குடித்துவிட்டு
स्मृत्वा	- நினைத்துவிட்டு	हृत्वा	- அபஹரித்துவிட்டு
क्षिप्त्वा	- போட்டுவிட்டு	कथयित्वा	- சொல்லிவிட்டு
गणयित्वा	- எண்ணிவிட்டு	चिन्तयित्वा	- நினைத்துவிட்டு
चोरयित्वा	- திருடிவிட்டு	पीडयित्वा	- துன்புறுத்தி
प्रीणयित्वा	- சந்தோஷப்படுத்திவிட்டு	वर्णयित्वा	- வர்ணித்துவிட்டு
पूजयित्वा	- பூஜித்துவிட்டு	कृष्ट्वा	- உழுதுவிட்டு

குறிப்பு

ஸம்ஸ்க்ருதத்ததில் धातुவுடன் त्वा என்னும் விகுதியைச் சேர்ப்பதால் ''விட்டு'' என்ற பொருள் கிடைக்கும்.

உதாரணம் :- नी அழைத்துச் செல்.

नी + त्वा = नीत्वा அழைத்துச் சென்றுவிட்டு.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

இதேபோல் எல்லா தாதுக்களுடனனும் त्वा என்பதைச் சேர்த்துக்கொள்ளலாம். இவ்வாறு त्वा என்ற प्रत्ययத்தைச் சேர்ப்பதால் ஏற்படும் சொல்லுக்கு त्वाप्रत्ययान्तम् अव्ययम् என்று பெயர். இந்தச் சொல்லுடன் வேற்றுமை உருப்புகள் சேர்க்கப்படமாட்டா. ஆகையால் இவைகள் ஒருவித மாறுபாட்டையும் அடையா. ஆதலால் தான் இவைகளுக்கு அவ்யயம் - என்று பெயர்.

வாக்யங்கள்

अहं कावेरीं गत्वा स्नानं करोमि।

நான் காவேரிக்குச் சென்று ஸ்நாநம் செய்கிறேன்.

भक्तः देवम् अर्चयित्वा भोजनं करोति।

பக்தன் கடவுளைப் பூஜித்துவிட்டுச் சாப்பிடுகிறான்

चोरः धनं चोरयित्वा वेगेन धावति।

திருடன் பணத்தைத் திருடிவிட்டு வேகமாக ஓடுகிறான்.

गर्दभः चोरं दृष्ट्वा कुक्कुरम् अवदत्।

கழுதை திருடனைப் பார்த்து நாயிடம் சொல்லிற்று.

कृषीवलाः क्षेत्राणि कृष्ट्वा गृहं आगच्छन्ति।

உழவர்கள் வயல்களை உழுதுவிட்டு வீட்டிற்கு வருகிறார்கள்.

दूताः वसिष्ठवचनम् उक्त्वा भरतं समानयन्।

தூதர்கள் வஸிஷ்ட முனிவருடைய வார்த்தையைக் கூறிவிட்டு பரதனை அழைத்து வந்தனர்.

प्रतिदिनं देवं नत्वा पाठशालां गच्छ।

ஒவ்வொருநாளும் ஸ்வாமியை வணங்கிவிட்டு பள்ளிக் கூடத்திற்குச் செல்,

अर्चकः देवालये पूजां कृत्वा गृहं प्रत्यागच्छति।

அர்ச்சகர் கோவிலில் பூஜை செய்துவிட்டு வீட்டிற்குத் திரும்பிவருகிறார்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

पवनकुमारः लङ्कानगरं दग्ध्वा रामसमीपम् आगच्छत्।

வாயு குமாரனை ஹநுமார் லங்காநகரைக் கொளுத்திவிட்டு ராமரது ஸமீபத்திற்கு வந்தார்.

।। वररुचिः ।।

अस्ति हिमालयो नाम पर्वतः।

இமயம் என்ற மலை இருக்கிறது.

तस्य अनेकानि शिखराणि सन्ति।

அதற்கு அநேக உச்சிகள் இருக்கின்றன.

तेषु उत्तरस्य शिखरस्य कैलासः इति नाम।

அவைகளில் வடக்கில் உள்ள உச்சிக்கு கைலாசம் என்று பெயர்.

तत्र परमेश्वरः पार्वत्या सह निवसति।

அங்கு பரமேச்வரன் பார்வதியுடன் வசிக்கிறார்.

तं कदाचित् पार्वती रहसि अपृच्छत्।

அவரை ஒரு சமயம் பார்வதி ரஹஸ்யமாகக் கேட்டாள்.

''देव ! नूतनां कथां कथय'' इति।

''தேவனே! புதிதான கதைசொல்'' என்று

सः तथा इति उक्त्वा कथाम् अकथयत्।

அவர் அப்படியே என்று சொல்லிவிட்டுக் கதை சொன்னார்.

तदानीं पार्वती नन्दिकेश्वरम् आहूय एवम् आज्ञापयत्।

அப்பொழுது பார்வதி நந்திகேச்வரரை அழைத்து இவ்வாறு கட்டளையிட்டாள்.

''द्वारे तिष्ठ வாசலில் நில்

न कमपि अन्तः प्रवेशय इति।

உள்ளே ஒருவரையும் நுழையவிடாதே'' என்று

तथा इति सः द्वारे अतिष्ठत्।

அப்படியே என்று அவன் வாசலில் நின்றான்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

अथ परमेश्वरः अत्यद्भुतं विद्याधराणां चरितम् अवर्णयत्।

பிறகு பரமேச்வரன் மிகவும் ஆச்சர்யமான வித்யாதரர்களின் சரிதத்தை வர்ணித்தார்.

तदानीं पुष्पदन्तो नाम परमेश्वरस्य किङ्करः आगच्छत्।

அப்பொழுது புஷ்பதந்தன் என்ற பரமேச்வரனுடைய பணியாள் வந்தான்.

सः तत्र गन्तुम् ऐच्छत्।

அவன் அங்கு செல்ல விரும்பினன்.

तं नन्दी अवारयत्।

அவனை நந்தி தடுத்தார்.

ततः सः अन्तः किम् अस्ति इति ज्ञातुम् ऐच्छत्।

பிறகு அவன் உள்ளே என்ன இருக்கிறது என்று தெரிந்துகொள்ள விரும்பினன்.

ततः स योगेन अलक्षितः भूत्वा अन्तः अगच्छत्।

பிறகு அவன் யோகத்தால் மறைந்துகொண்டு உள்ளே சென்றான்.

तत्र सः परमेश्वरम् अपश्यत्।

அங்கு அவன் பரமேச்வரனைப் பார்த்தான்.

परमेश्वरः अत्यद्भुतां विद्याधरकथां कथयन् आसीत्।

பரமேச்வரன் மிகவும் அற்புதமான வித்யாதரனுடைய கதையைச் சொல்லிக் கொண்டிருந்தார்.

अथ सः स्वगृहम् अगच्छत्।

பிறகு அவன் தன்னுடைய வீட்டிற்குச் சென்றான்.

तत्र सः स्वभार्यायै जयायै तां कथाम् अकथयत्।

அங்கு அவன் தன்னுடைய மனைவியான ஜயைக்கு அக்கதையைச் சொன்னன்.

अन्येद्युः सा जया पार्वत्याः पुरतः तां कथाम् अकथयत्।

மறுநாள் அந்த ஜயை பார்வதியின் முன்னிலையில் அக்கதையைச் சொன்னள்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

तां श्रुत्वा पार्वती परमेश्वराय अक्रुध्यत्।

அதைக்கேட்டு பார்வதீ பரமேச்வரனிடம் சினம் கொண்டாள்.

सा अवदत् அவள் சொன்னாள்.

न अपूर्वा कथा भवता उक्ता।

அபூர்வமான கதை உம்மால் சொல்லப்படவில்லை.

जया अपि एतां जानाति। ஜையும் இதை அறிகிருள்.

इति என்று.

परमेश्वरः कथं जया जानाति इति संशय्य प्रणिधानेन कारणम् अबोधत्।

பரமேச்வரன், எப்படி ஜயை தெரிந்து கொண்டிருக்கிருள் என்று சந்தேகித்து மனதை ஒருமைப்படுத்துவதால் தெரிந்துகொண்டார்.

சொற்கள்

शिखरम्, शिखरः - மலை உச்சி

रहसि - தனிமையில்

गन्तुं - செல்வதற்கு

ज्ञातु - அறிந்துகொள்வதற்கு

प्रणिधानं - மனதை ஒருமைப்படுத்தல்

आहूय - கூப்பிட்டு

वारय - தடை செய்

अलक्षितः - காணப் படாதவன்

जानाति - அறிகிருன்

क्रुध् - என்ற தாது நான்காம் வேற்றுமையைத் தழுவும்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

பாடம் - 40

तुम् என்பதில் முடியும் அவ்யயம்

गन्तुम् - செல்வதற்கு
नेतुम् - அழைத்துச் செல்வதற்கு
पतितुम् - விழுவதற்கு
बोद्धुम् - தெரிந்துகொள்வதற்கு
कथयितुम् - சொல்வதற்கு
गणयितुम् - எண்ணுவதற்கு
घोषयितुम् - கோஷிப்பதற்கு
चिन्तयितुम् - நினைப்பதற்கு
भवितुम् - இருப்பதற்கு
रक्षितुम् - காப்பாற்றுவதற்கு
श्रोतुं - கேட்பதற்கு
जीवितुम् - வாழ்வதற்கு
त्यक्तुम् - விடுவதற்கு
दग्धुम् - எரிப்பதற்கு
नन्तुम् - வணங்குவதற்கு
जेतुम् - ஜயிப்பதற்கு
द्रष्टुम् - பார்ப்பதற்கு
पातुम् - குடிப்பதற்கு
हर्तुम् - எடுத்துச் செல்வதற்கு
चोरयितुम् - திருடுவதற்கு
पीडयितुम् - துன்புறுத்துவதற்கு
प्रीणयितुम् - சந்தோஷப்படுத்துவதற்கு

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

स्पृहयितुम् - விரும்புவதற்கு

अटितुम् - சுற்றுவதற்கு

चलितुम् - செல்வதற்கு

शंसितुम् - புகழ்வதற்கு

निन्दितुम् - திட்டுவதற்கு

पूजयितुम् - பூஜிப்பதற்கு

वर्णयितुम् - வர்ணிப்பதற்கு

सान्त्वयितुम् - சமாதானப்படுத்துவதற்கு

குறிப்பு

ஸம்ஸ்க்ருதத்தில் धातुவுடன் तुम् என்னும் விகுதியைச் சேர்ப்பதால் 'கு' என்ற பொருள் கிடைக்கும்.

உதாரணம் :- गम् - போ

गम् + तुम् = गन्तुम् = போவதற்கு

இதேபோல் எல்லாத் தாதுக்களுடனும் तुम् என்பதைச் சேர்த்துக்கொள்ளலாம். இவ்வாறு तुम् என்ற प्रत्ययத்தைச் சேர்ப்பதால் ஏற்படும் சொல்லுக்கு तुमुन्नन्तं अव्ययम् என்று பெயர். இந்தச் சொல்லுடன் வேற்றுமை உருப்புகள் சேர்க்கப் படமாட்டா. ஆகையால் இவைகள் ஒருவித மாறுபாட்டையும் அடையா. ஆகையால் இவைகளுக்கு अव्ययम् என்று பெயர்.

வாக்யங்கள்

अहं पाठं पठितुं पाठशालां गच्छामि ।

நான் பாடம் படிப்பதற்குப் பள்ளிக் கூடம் போகிறேன்.

भक्ताः देवं द्रष्टुं देवालयं व्रजन्ति ।

பக்தர்கள் கடவுளைத் தரிசிப்பதற்குக் கோவிலுக்குச் செல்கிறார்கள்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

त्वं कुत्र क्रीडितुम् इच्छसि?

நீஎங்கு விளையாட விரும்புகிறாய்?

चोरः धनं चोरयितुं धनिकस्य गृहं प्रविशति।

திருடன் பணத்தைத் திருடுவதற்குப் பணக்காரனுடைய வீட்டில் நுழைகிறான்.

दूताः भरतम् आनेतुं नगरात् बहिः अगच्छन्।

தூதர்கள் பரதனை அழைத்து வருவதற்குப் பட்டணத்திற்கு வெளியே சென்றார்கள்.

सः कुत्र भोजनं कर्तुम् इच्छति?

அவன் எங்கு போஜனம் செய்வதற்கு விரும்புகிறான்?

नृपः अरीन् जेतुम् अगच्छत्।

அரசன் பகைவர்களை ஜயிப்பதற்குச் சென்றான்.

कर्षकाः धान्यं लब्धुं क्षेत्रं कृषन्ति।

உழவர்கள் தான்யத்தை அடைவதற்கு வயலை உழுகிறார்கள்.

रावणः सीतां हर्तुं पञ्चवटीम् अगच्छत्।

இராவணன் ஸீதையை அபஹரிப்பதற்குப் பஞ்சவடிக்குச் சென்றான்.

त्वं कथां श्रोतुम् इच्छसि किम्? நீகதை கேட்க விரும்புகிறாயா?

।। वररुचिः ।।

अथ परमेश्वरः एवम् अवदत्।

பிறகு பரமேச்வரன் இவ்வாறு சொன்னார்.

पुष्पदन्तः योगेन अलक्षितः भूत्वा अन्तः प्रविश्य कथां आकर्णयत्।

புஷ்பதந்தன் யோகத்தால் மறைந்துகொண்டு உள்ளே நுழைந்து கதையைக் கேட்டான்.

सः जयायै अकथयत् इति।

அவன் ஜயைக்குச் சொன்னான் என்று.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

तत् श्रुत्वा पार्वती भृशम् अकुप्यत्।

அதுகேட்டு பார்வதீ மிகவும் கோபங்கொண்டாள்.

सद्य एव पुष्पदन्तम् आहूय मर्त्यः भव इति सा अशपत्।

உடனேயேபுஷ்பதந்தனைக் கூப்பிட்டு 'மனிதனாகக் கடவாய்' என்று அவள் சபித்தாள்.

अथ जया देव्याः पादयोः प्रणिपत्य एवम् अयाचत।

பிறகு ஜயை தேவியின் பாதங்களில் வணங்கி இவ்வாறு வேண்டினாள்.

देवि! क्षमस्व! தேவியே! மன்னித்தருளும்.

कुरु शापस्य अवसानम् इति।

சாபத்தின் முடிவைச் செய்யவேணும் என்று.

देवी एवम् अवदत्। தேவி இவ்விதம் செப்பினாள்.

अस्ति अलकायां सुप्रतीको नाम यक्षः।

அலகையில் சுப்ரதீகன் என்ற யக்ஷன் இருக்கிறான்.

सः कुबेरस्य किङ्करः। அவன் குபேரனுடைய வேலைக்காரன்.

तस्य स्थूलशिराः नाम राक्षसः सखा अभवत्।

அவனுக்கு ஸ்தூலசிரஸ் என்ற பெயர்கொண்ட அரக்கன் நண்பனாக இருந்தான்.

सः अतीव दुष्टः। அவன் மிகக் கொடியவன்.

सर्वदा पापं कर्म करोति स्म।

எப்பொழுதும் கொடிய செயலைச் செய்துவந்தான்.

तेन राक्षसेन सह संगतं तं दृष्ट्वा क्रुद्धः कुबेरः तम् अशपत्।

அந்த அரக்கனுடன் நட்புகொண்ட அவனைப் பார்த்துக் குபேரன் கோபம்கொண்டவனாக சபித்தான்,

पिशाचो भव इति। பிசாசாக ஆகக் கடவாய்என்று.

अस्ति विन्ध्यो नाम पर्वतः। விந்தியம் என்ற மலை இருக்கிறது.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

तस्य कानने सः पिशाचो भूत्वा वर्तते।

அதனுடைய காட்டில் அவன் பிசாசாக இருக்கிறான்.

तस्य काणभूतिः इति नाम। அவனுக்குக் காணபூதி என்று பெயர்.

तत्र गत्वा तं पश्य। அங்கு சென்று அவனைப் பார்.,

ततः त्वं पूर्वं जन्म स्मरिष्यसि।

பிறகு நீமுற்பிறவியை நினைப்பாய்

तस्मै इमां कथां कथय। அவனுக்கு இந்தக் கதையைச் சொல்.

ततः शापात् मुक्तः भविष्यति इति।

பிறகு சாபத்திலிருந்து விடுபட்டவனாய் ஆவாய் என்று.

एवम् उक्त्वा देवी व्यरमत्। இவ்வாறு தேவி சொல்லி முடித்தாள்.

சொற்கள்

अलक्षितः - காணப்படாதவன்.

प्रविश्य - நுழைந்து.

आकर्णयत् - கேட்டான்.

सद्यः - உடனேயே.

आहूय - அழைத்து.

मर्त्यः - மனிதன்.

रम् - சந்தோஷப்படு, விளையாடு.

प्रणिपत्य - வணங்கி.

अयाचत - வேண்டினன்.,

काननम् - காடு.

स्थूलशिराः - பருத்த தலையை உடையவன்.

स्थूलं शिरः यस्य सः स्थूलशिराः।

विरम् - நில்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

பாடம் - 41

உபஸர்க்கங்கள்

வினைச் சொல்லுக்கு முன் உபயோகிக்கப்படும் ப முதலியவைகளுக்கு உபஸர்க்கங்கள் என்று பெயர். இதை வியாகரண சாஸ்திரத்தை இயற்றிய பாணினி முனிவர் उपसर्गाः क्रियायोगे என்ற சூத்திரத்தில் குறிப்பிடுகிறார்.

प्रादयः क्रियायोगे उपसर्गसंज्ञाः स्युः । प्र । परा । अप । सम् । अनु । अव । निस् । निर् । दुस् । दुर् । वि । आङ् । नि । अधि । अपि । अति । सु । उत् । अभि । प्रति । परि । उप । एते प्रादयः ॥

இவைகளுக்கு **प्रादिकள்** என்று பெயர்.

இந்த உபஸர்க்கங்கள் வினைச் சொல்லுக்கு முன் சேர்க்கப் படும்பொழுது வினைச் சொற்களின் பொருள் மாறுபடுகிறது.

उपसर्गेण धात्वर्थः बलादन्यत्र नीयते ।

உதாரணங்கள்

गच्छति - செல்கிறான், **आगच्छति** - வருகிறான், **अनुगच्छति** - பின் தொடர்ந்து செல்கிறான், **अधिगच्छति** - அடைகிறான், **अवगच्छति** - தெரிந்துகொள்கிறான், **निर्गच्छति** - வெளியே செல்கிறான், **उद्गच्छति** - மேலே கிளம்புகிறான், **उपगच्छति** - சமீபத்தில் செல்கிறான்.

नयति - கொண்டு போகிறான், **आनयति** - கொண்டு வருகிறான், **परिणयति** - மணந்துகொள்கிறான், **उपनयति** - உபநயனம் செய்கிறான், **अनुनयति** - சமாதானப்படுத்துகிறான்.

இவைகளைப்போலவே மற்ற வினைச் சொற்களுடன் உபஸர்க்கங்கள் சேரும்பொழுது பொருள் மாறுபடுவதைக் கவனிக்கவும்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

वाक्यங்கள்

अहम् इदानीमेव नगरात् आगच्छामि।

நான் இப்பொழுதுதான் பட்டினத்திலிருந்து வருகிறேன்.

आसनेभ्यः छात्राः उत्तिष्ठन्ति।

ஆஸனங்களிலிருந்து மாணவர்கள் எழுந்திருக்கிருர்கள்.

रवेः जनाः सुखं अधिगच्छन्ति।

சூரியனிடமிருந்து ஜனங்கள் சுகமடைகிருர்கள்.

शिष्याय शास्त्रम् उपदिशति गुरुः।

குரு சிஷ்யனுக்கு சாஸ்திரத்தை உபதேசிக்கிருர்.

कलिभ्यः दुःखानि उद्भवन्ति।

சண்டைகளிலிருந்து துன்பங்கள் உண்டாகின்றன.

आचार्यः आसने उपविशति।

ஆசிரியர் ஆஸனத்தில் உட்காருகிருர்.

कासारे कमलानि उद्भवन्ति।

தடாகத்தில் தாமரைகள் உண்டாகின்றன.

बालकाः सायङ्काले विद्यालयात् गृहं प्रत्यागच्छन्ति।

பையன்கள் மாலையில் பள்ளிக் கூடத்திலிருந்து வீட்டிற்கு திரும்பிவருகிருர்கள்.

सुकृतं दुष्कृतं च गच्छन्तम् अनुगच्छतः।

நன்மையும், தீமையும் செல்கிறவனைப் பின் தொடர்ந்து செல்கின்றன.

रामः दशरथस्य वचनम् अनुपालयन् नगरात् निरगच्छत्।

இராமன் தசரதனுடைய சொல்லைக் காப்பாற்றிக் கொண்டு பட்டினத்திலிருந்து வெளியே கிளம்பினன்.

विहरति - விளையாடுகிருன், प्रहरति - அடிக்கிருன்,

संहरति - கொல்கிருன், परिहरति - போக்குகிருன்,

अपहरति - அபஹரிக்கிருன்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

बालाः सायङ्काले विहरन्ति ।

பையன்கள் ஸாயங்காலத்தில் விளையாடுகிறார்கள்.

साधवः पुण्यकर्माणि कृत्वा पापं परिहरन्ति ।

ஸாதுக்கள் புண்ய கர்மாக்களைச் செய்து பாபத்தை போக்குகிறார்கள்.

वने व्याघ्रः मृगं संहरति ।

காட்டில் புலி மானைக் கொல்கிறது.

तस्करः रात्रौ धनिकस्य गृहं प्रविश्य धनम् अपहरति ।

திருடன் இரவில் பணக்காரனின் வீட்டில் நுழைந்து பணத்தை அபஹரிக்கிறான்.

॥ वररुचिः ॥

तदानीं माल्यवान् नाम गणोत्तमः पुष्पदन्तस्य कृते एवम् अवदत् ।

அப்பொழுது மால்யவான் என்ற, சிவபெருமானின் சிறந்த பணியாள் புஷ்பதந்தனுக்காக இவ்வாறு கூறினான்.,

''देवि ! न युक्तम् इदम् । தேவி ! இது சரியன்று.

अल्पः अपराधः दण्डः तीक्ष्णः'' इति ।

குற்றம் சிறியது தண்டனை கடுமையானது என்று

अनेन अविनयेन देवी तम् अपि अशपत् ।

இந்த வணக்கமின்மையால் தேவி அவனையும் சபித்தாள்.

त्वम् अपि मर्त्यः भव इति । நீயும் மானிடனாகு என்று

तस्मात् काणभूतेः सकाशात् इमां कथाम् आकर्णय ।

அந்த காணபூதியிடமிருந்து இந்தக் கதையைக் கேள்.

पश्चात् शापात् मुक्तः भव इति ।

பிறகு சாபத்திலிருந்து விடுபடு என்று.

तत्क्षणं एव पुष्पदन्तः माल्यवान् च अन्तरभवताम् ।

அக்கணமே புஷ்பதந்தனும் மால்யவானும் மறைந்தனர்.

अस्ति वत्सो नाम जनपदः । வத்ஸம் என்ற தேசம் இருக்கிறது.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

तत्र कौशाम्बी नाम नगरी।

அங்கு கௌசாம்பீ என்று ஒரு பட்டினம்.

तत्र सोमदत्तः नाम ब्राह्मणः अभवत्।

அங்கு ஸோமதத்தன் என்ற பிராமணன் இருந்தான்.

सः अतीव दरिद्रः आसीत्। அவன் மிகவும் ஏழையாக இருந்தான்.

तस्य वसुदत्ता नाम भार्या आसीत्।

அவனுக்கு வஸுதத்தை என்ற மனைவி இருந்தாள்.

तयोः दम्पत्योः अयं पुष्पदन्तः पुत्रः अभवत्।

அந்த தம்பதிகளுக்கு இந்த புஷ்பதந்தன் பிள்ளையாக ஆனான்.

सोमदत्तः अस्य पुत्रस्य वररुचिः इति नाम अकरोत्।

ஸோமதத்தன் இந்தப் பிள்ளைக்கு 'வரருசி' என்று பெயரிட்டான்.

वररुचिः क्रमेण युवा अभवत्। வரருசி க்ரமமாக இளைஞன் ஆனான்.

अत्रान्तरे केनापि व्याधिना पीड्यमानः सोमदत्तः पञ्चत्वम् अगच्छत्।

இதற்குள் ஏதோ ஒரு நோயால் துன்புறுத்தப்பட்ட ஸோமதத்தன் இறந்தான்.

वसुदत्ता कृच्छ्रेण वररुचिम् अपोषयत्।

வசுதத்தை கஷ்டப்பட்டு வரருசியை வளர்த்தாள்.

சொற்கள்

गणोत्तमः - கணங்களில் சிறந்தவன் गणेषु उत्तमः गणोत्तमः

कृते - என்பது ஆரும் வேற்றுமையைத் தழுவும்.
पुष्पदन्तस्य कृते - புஷ்பதந்தனுக்காக

सकाशात् - இடமிருந்து

जाया च पतिः च दम्पती - கணவனும் மனைவியும்
तयोः दम्पत्योः

पीड्यमानाः - துன்புறுத்தப்படுகின்ற

पञ्चत्वम् अगच्छत् - இறந்தான் कृच्छ्रेण - கஷ்டத்துடன்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

பாடம் - 42

"உ" (उ) வில் முடியும் ஆண்பால் சொற்கள்

	ஒருமை	இருமை	பன்மை
முதல் வேற்றுமை	गुरुः	गुरू	गुरवः
இரண்டாம் வேற்றுமை	गुरुं	गुरू	गुरून्
மூன்றும் வேற்றுமை	गुरुणा	गुरुभ्यां	गुरुभिः
நான்காம் வேற்றுமை	गुरवे	गुरुभ्यां	गुरुभ्यः

இதேபோல மற்ற 'உ'வில் முடியும் சொற்களின் சப்தங்களையும் எழுதி பழகிக்கொள்ள வேண்டும்.

சொற்கள்

इषुः	- அம்பு	गुरुः	- ஆசிரியர், குரு
शम्भुः	- சிவன்	तरुः	- மரம்
परशुः	- கோடாலி	पांसुः	- புழுதி
प्रभुः	- பிரபு	बाहुः	- கை
सुबाहुः	- ஒரு அரக்கன்	बिन्दुः	- சொட்டு
इन्दुः	- சந்திரன்	भानुः	- சூர்யன்
पाण्डुः	- பாண்டு	शिशुः	- குழந்தை
मनुः	- மனு	वायुः	- காற்று
विष्णुः	- விஷ்ணு	शत्रुः	- பகைவன்

य வில் முடியும் அவ்யயம்

आनीय	- கொண்டுவந்து	आगत्य	- வந்து
अनुभूय	- அனுபவித்து	उत्पत्य	- கிளம்பி
परित्यज्य	- விட்டுவிட்டு	आपीय	- நன்கு குடித்துவிட்டு
प्रक्षिप्य	- போட்டுவிட்டு	अपहृत्य	- அபஹரித்துவிட்டு
विचिन्त्य	- யோசித்து	निपीड्य	- பிழிந்து

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

வாக்யங்கள்

शम्भुः त्रिपुरम् अजयत् ।

சிவன் திரிபுரனை ஜயித்தான்.

वायुना तरवः कम्पन्ते ।

காற்றால் மரங்கள் அசைகின்றன.

नृपतिः युद्धे शत्रून् जयति ।

அரசன் போரில் சத்ருக்களை ஜயிக்கிருன்.

चातकः मेघात् जलबिन्दून् विन्दति ।

சாதகபக்ஷி மேகத்திலிருந்து தண்ணீர்த் திவிலைகளை அடைகிறது.

प्रभुः भृत्यान् आदिशति ।

பிரபு வேலைக்காரர்களை கட்டளையிடுகிருர்.

वनचरः परशुना कानने सर्वान् तरून् अच्छिनत् ।

காட்டில் திரிபவன் கோடாலியால் வனத்தில் எல்லா மரங்களையும் வெட்டினன்.

जलबिन्दुनिपातेन क्रमशः पूर्यते घटः ।

ஜலத் திவிலைகள் விழுவதால் முறையாகக் குடம் நிரப்பப்படுகிறது.

रामः बाणेन सुबाहुम् अमारयत् ।

ராமன் அம்பினால் ஸுபாஹு என்ற அரக்கனைக் கொன்ருன்.

सूर्यवंशे वैवस्वतः नाम मनुः आसीत् ।

சூர்ய வம்சத்தில் வைவஸ்வதன் என்று மனு இருந்தார்.

धर्मपुत्रः, भीमसेनः, अर्जुनः, नकुलः, सहदेवः एते पाण्डोः सुताः।

தர்மபுத்ரர், பீமஸேனன், அர்ஜுனன், நகுலன், ஸஹதேவன் இவர்கள் பாண்டுவின் புத்திரர்கள்.

पूर्णिमायाम् आकाशे इन्दुः सम्यक् प्रकाशते ।

பௌர்ணமியன்று ஆகாயத்தில் சந்திரன் நன்கு பிரகாசிக்கிருன்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

महाविष्णुः साधूनां परित्राणाय दुष्टानां विनाशाय च तदा तदा भूमौ अवतरति।

மஹாவிஷ்ணு நல்லவர்களைக் காப்பாற்றவும் துஷ்டர்களை அழிக்கவும் அப்போதைக்கப்போது பூமியில் அவதரிக்கிறார்.

गुरुः स्वीयेन उपदेशेन शिष्याणां संशयम् अपाकरोति।

ஆசார்யர் தனது உபதேசத்தால் மாணவர்களின் ஸந்தேஹத்தைப் போக்குகிறார்.

॥ वररुचिः ॥

अत्रान्तरे वेतसं नाम नगरम् आसीत्।

இந்த சமயத்தில் வேதஸம் என்ற பட்டணம் இருந்தது.

तत्र देवस्वामी, करम्भकः इति द्वौ ब्राह्मणौ भ्रातरौ आस्ताम्।

அங்கு தேவஸ்வாமி, கரம்பகன் என்ற இரண்டு பிராமணர்கள் சகோதரர்களாக இருந்தார்கள்.

तौ परस्परं प्रीतौ अभवताम्।

அவர்கள் ஒருவருக்கொருவர் பிரியமாக இருந்தார்கள்

तयोः देवस्वामिनः इन्द्रदत्तो नाम पुत्रः अजायत।

அவர்களில் தேவஸ்வாமிக்கு இந்திர தத்தன் என்ற பிள்ளை பிறந்தான்.

करम्भकस्य व्याडिः नाम सुतः अभवत्।

கரம்பகனுக்கு வ்யாடி என்ற மகன் உண்டானான்.

तौ पुत्रौ क्रमेण अवर्धेताम्।

அந்த இரண்டு புத்திரர்களும் முறையாக வளர்ந்து வந்தார்கள்.

''शैशवे क्रीडन्तौ तौ दृष्ट्वा तौ भ्रातरौ अतीव अतुष्यताम्।

குழந்தைப் பருவத்தில் விளையாடுகின்ற அவர்களைப் பார்த்து அந்த சகோதரர்கள் மிகவும் மகிழ்ச்சி அடைந்தார்கள்.,

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

एवं कतिपयः कालः अगच्छत्।

இம்மாதிரியாகச் சில காலம் சென்றது.

अथ करम्भकः केनापि व्याधिना पीडितः लोकान्तरम् अगच्छत्।

பிறகு கரம்பகன் ஏதோ ஒரு நோயால்பீடிக்கப்பட்டு மறு உலகத்திற்குச் சென்ருன்.

तेन शोकेन नितरां निर्विण्णः देवस्वामी देशान्तरम् अगच्छत्।

அந்த துக்கத்தால் மிகவும் வருத்தமடைந்த தேவ ஸ்வாமி வேறு தேசத்திற்குச் சென்ருன்.

तयोः पत्न्यौ अपि भर्तृगतिम् अनुसृत्य अगच्छताम्।

அவர்களுடைய மனைவிகளும் கணவர்களின் கதியை அனுஸரித்துச் சென்றனர்.

तेन तौ बालौ अनाथौ अभवताम्।

அதனல் அந்த இரண்டு பையன்களும் அனுதைகளாக ஆனர்கள்.

तयोः पितृभ्याम् आर्जितं प्रभूतं धनम् आसीत्।

அவர்களுடைய தந்தையர்களால்ஏராளமான பணம் சேமித்து வைக்கப்பட்டிருந்தது.

तथापि तौ विद्यां लब्धुं अत्यन्तं उत्सुकौ आस्ताम्।

அப்படியிருந்தும் அவர்கள் கல்வியைப் பெறுவதற்கு மிகவும் ஆவல் கொண்டவர்களாக இருந்தார்கள்.

तदर्थं भगवन्तं कार्तिकेयम् उद्दिश्य तीव्रं तपः चक्रतुः।

அதற்காகப் பகவானுன கார்த்திகேயனைக் குறித்துக் கடுந்தவம் செய்தனர்.

तयोः तपसा प्रसन्नः भगवान् कार्तिकेयः स्वप्ने तयोः पुरतः प्रादुरभवत्।

அவர்களுடைய தவத்தால் சந்தோஷமடைந்த பகவானுன கார்த்திகேயன் ஸ்வப்னத்தில் அவர்களுக்கு முன்னல் தோன்றினர்.

प्रादुर्भूय च एवम् आदिशत्। தோன்றி இவ்வாறு கட்டளையிட்டார்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

சொற்கள்

अवर्धत - வளர்ந்தான் (ஒருமை)

अवर्धेताम् - இருவர் வளர்ந்தார்கள் (இருமை)

शैशवे - குழந்தைப் பருவத்தில்

शिशोः भावः शैशवम्, तस्मिन् शैशवे

अन्यः लोकः लोकान्तरं - மறு உலகம்

अन्यः देशः देशान्तरं - அந்நிய தேசம்

निर्विण्णः - - வருத்தமடைந்தவன்

न विद्यते नाथः ययोः तौ अनाथौ - நாதன் அற்றவர்கள்

आर्जितम् - சம்பாதிக்கப்பட்ட

उत्सुकः - ஆவலுடையவன்

तदर्थम् - அதன் பொருட்டு

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

பாடம் - 43

"உ" (उ) வில் முடியும் ஆண்பால் சொற்கள்

	ஒருமை	இருமை	பன்மை
ஐந்தாம் வேற்றுமை	गुरोः	गुरुभ्यां	गुरुभ्यः
ஆறாம் வேற்றுமை	गुरोः	गुर्वोः	गुरूणाम्
ஏழாம் வேற்றுமை	गुरौ	गुर्वोः	गुरुषु
எட்டாம் வேற்றுமை	हे गुरो	हे गुरू	हे गुरवः

இதுபோலவே மற்ற "உ"வில் முடியும் சப்தங்களையும் எழுதிப் பழகிக்கொள்ள வேண்டும்.

சொற்கள்

मधुः - வசந்தகாலம்	कुरुः - ஒரு தேசத்தின் பெயர்
पशुः - மிருகம்	बन्धुः - உறவினன்
साधुः- நல்லவன்	असाधुः- கெட்டவன்
सूनुः - மகன்	इक्षुः - கரும்பு
भीरुः- பயந்தவன்	विभुः - எங்கும் நிறைந்தவன் கடவுள்

வாக்யங்கள்

तरोः पुष्पाणि फलानि च पतन्ति ।

மரத்திலிருந்து மலர்களும் கனிகளும் விழுகின்றன.

शम्भोः कृपया जनाः सुखं जीवन्ति ।

சம்புவின் கிருபையால் ஜனங்கள் சுகமாக வாழ்கிறார்கள்.

गुरूणाम् उपदेशम् आकर्णयामः ।

குருக்களுடைய உபதேசத்தைக் கேட்கிறோம்.

साधवः मृत्योः भयं न गणयन्ति ।

சாதுக்கள் சாவின் பயத்தைப் பொருட்படுத்துவதில்லை.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

रामः बन्धुषु स्नेहेन वर्तते ।

ராமன் பந்துக்களிடத்தில் நட்புடன் இருக்கிருன்.

इन्दौ कलङ्कः अस्ति ।

சந்திரனிடத்தில் களங்கம் இருக்கிறது.

कुरुभ्यः दूतः आगच्छत् ।

குரு நாட்டிலிருந்து தூதன் வந்தான்.

पशुष्वपि कृतज्ञता अस्ति ।

மிருகங்களிடத்தில் கூட செய் நன்றி இருக்கிறது.

मधौ वृक्षाः पुष्यन्ति ।

வசந்த காலத்தில் மரங்கள் புஷ்பிக்கின்றன.

भीरुः युद्धक्षेत्रात् धावति ।

பயந்தவன் போர்களத்திலிருந்து ஓடுகின்ருன்.

असाधुः साधून् निन्दति ।

கெட்டவன் நல்லவர்களைத் திட்டுகிருன்.

भृत्यः प्रभोः आज्ञया कर्म करोति ।

வேலைக்காரன் யஜமானனுடைய உத்தரவினல் வேலைசெய்கிருன்.

विष्णोः वक्षसि श्रीवत्सनामकं लाञ्छनं वर्तते ।

விஷ்ணுவின் மார்பில் ஸ்ரீவத்ஸம் என்ற பெயருள்ள மச்சம் இருக்கிறது.

भीमसेनः पाण्डोः सुतः ।

பீமஸேனன் பாண்டுவின் பிள்ளை.

मरौ सलिलं नास्ति, अतः तत्र तरवः नोद्भवन्ति ।

பாலைவனத்தில் தண்ணீர் கிடையாது; அதனல் அங்கு மரங்கள் உண்டாவதில்லை.

धीमति अस्मिन् वटौ गुरोः अधिका प्रीतिः वर्तते ।

புத்திசாலியான இந்த ப்ரஹ்மசாரியிடத்தில் ஆசிரியருக்கு மிகுந்த அன்பு இருக்கிறது.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

हे गुरो ! भवन्तः अस्मभ्यं पाठान् पाठयन्तु।

ஹே குரோ ! நீங்கள் எங்களுக்கு பாடங்களை கற்றுக் கொடுங்கள்.

इक्षोः रसः अत्यन्तं मधुरः ।

கரும்பின் சார் மிகவும் இனிப்பானது.

अस्मात् गुडशर्करामधुरखण्डादिकम् उत्पादयन्ति ।

இதிலிருந்து வெல்லம், சர்க்கரை, கற்கண்டு முதலியவற்றை உண்டுபண்ணுகிறார்கள்.

यज्ञे अध्वर्यवे दक्षिणां ददाति यजमानः ।

யாகத்தில் யஜமானன் அத்வர்யுவுக்கு தக்ஷிணையைக் கொடுக்கிறான்.

॥ श्लोकः ॥

गुरुरग्निर्द्विजातीनां वर्णानां ब्राह्मणो गुरुः ।
पतिरेको गुरुः स्त्रीणां सर्वस्याभ्यागतो गुरुः ॥

अन्वयः - द्विजातीनां अग्निः गुरुः । वर्णानां ब्राह्मणः गुरुः । स्त्रीणां पतिः एकः गुरुः । सर्वस्य अभ्यागतो गुरुः ।

பதவுரை :- द्विजातीनां - அந்தணர்களுக்கு, अग्निः - அக்னி, गुरुः - குரு, वर्णानां - நான்கு ஜாதிகளுக்கு, ब्राह्मणः - அந்தணன், गुरुः - குரு, स्त्रीणां - பெண்களுக்கு, पतिः एकः - கணவன் ஒருவனே, गुरुः - குரு, सर्वस्य - அனைவருக்கும், अभ्यागतः - அதிதி, गुरुः - குரு.

கருத்து :- அந்தணர்களுக்கு அக்னி போற்றத் தக்கவன், நான்கு ஜாதிகளுக்கும் பிராமணன் போற்றத் தகுந்தவன். பெண்களுக்குக் கணவன் ஒருவன்தான் போற்றத் தகுந்தவன். எல்லோருக்கும் விருந்தினன் போற்றத் தகுந்தவன்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

॥ वररुचिः ॥

''अस्ति पाटलीपुत्रं नाम नगरम्।

பாடலீபுத்திரம் என்ற ஒரு பட்டிணம் இருக்கிறது.

तत्र वर्षो नाम कश्चित् ब्राह्मणः अस्ति।

அங்கு வர்ஷன் என்ற ஒரு பிராமணன் இருக்கிருன்.

तस्य समीपं गच्छतम्।

அவனுடைய அருகில் நீங்கள் இருவரும் செல்லுங்கள்.

सः वां सर्वा विद्या उपदेक्ष्यति'' इति।

அவன் உங்களுக்கு எல்லா வித்யைகளையும் உபதேசிப்பார் என்று.

तच्छ्रुत्वा व्याडीन्द्रदत्तौ अतुष्यताम्।

அதுகேட்டு வியாடியும் இந்திரதத்தனும் மகிழ்ச்சி அடைந்தார்கள்.

तथैव तौ पाटलीपुत्रम् अगच्छताम्।

அப்படியே அவ்விருவரும் பாடலீபுத்திரம் சென்றனர்.

गत्वा वर्षः कुत्र अस्ति इति अपृच्छताम्।

சென்று வர்ஷன் எங்கு இருக்கிருன் என்று கேட்டார்கள்.

जनाः एवम् अवदन्।

ஜனங்கள் இவ்வாறு கூறினர்.

''अस्ति वर्षः नाम विप्रः।

வர்ஷன் என்ற ஒரு அந்தணன் இருக்கிருன்.

स अतीव मूर्खः'' इति।

அவன் மிகுந்த முட்டாள் என்று.

तत् आकर्ण्य तौ दुःखितौ अभवताम्।

அதைக் கேட்டு அவ்விருவரும் துக்கமடைந்தனர்.

अथ तौ वर्षस्य गृहम् अपश्यताम्।

பிறகு அவ்விருவரும் வர்ஷனுடைய வீட்டைப் பார்த்தனர்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

तत् गृहं सर्वत्र जीर्णं आसीत्।

அவ்வீடு எல்லா இடங்களிலும் இடிந்திருந்தது.

सर्वत्र मूषकैः कृतानि बिलानि आसन्।

எங்கும் எலிகளால் செய்யப்பட்ட பொந்துகள் இருந்தன.

भित्तयः विश्लिष्टाः आसन्। சுவர்கள் விரிந்திருந்தன.

एवं विधस्य गृहस्य अन्तः वर्षः आसीत्।

இப்படிப்பட்ட வீட்டிற்குள் வர்ஷன் இருந்தான்.

सः ध्याने मग्नः आसीत्। அவன் தியானத்தில் ஆழ்ந்திருந்தான்.

சொற்கள்

व्याडिश्च इन्द्रदत्तश्च व्याडीन्द्रदत्तौ - வியாடியும் இந்திர தத்தனும்

विश्लिष्टाः - பிரிந்தவைகள், விரிந்தவைகள்

उपदेक्ष्यति - கற்றுக்கொடுப்பான்

विप्रः ब्राह्मणः द्विजातिः - அந்தணன்

अतीव - மிகவும்

मूर्खः - முட்டாள்

वल्मीकः - புற்று,பொந்து

भित्तयः - சுவர்கள்

एवंविधः - இப்படிப்பட்டவன்

अन्तः - உள்ளே

मग्नः - மூழ்கியவன்

पतिः - கணவன்

अभ्यागतः - விருந்தாளி

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

பாடம் - 44

"ரு" (ऋ) வில் முடியும் ஆண்பால் சொற்கள்

	ஒருமை	இருமை	பன்மை
முதல் வேற்றுமை	कर्ता	कर्तारौ	कर्तारः
இரண்டாம் வேற்றுமை	कर्तारं	कर्तारौ	कर्तॄन्
மூன்றும் வேற்றுமை	कर्त्रा	कर्तृभ्यां	कर्तृभिः
நான்காம் வேற்றுமை	कर्त्रे	कर्तृभ्यां	कर्तृभ्यः

இதுபோலவே "ऋ" வில் முடியும் சொற்களின் சப்தங்களை எழுதிப் பழகிக்கொள்ள வேண்டும்.

சொற்கள்

धातृ	- பிரம்மதேவர்	दातृ	- கொடையாளி
नेतृ	- தலைவன்	वक्तृ	- பேசுகிறவன்
भोक्तृ	- அனுபவிப்பவன்	त्वष्टृ	- த்வஷ்டா
द्वेष्टृ	- வெறுப்பவன்	नप्तृ	- கொள்ளுப்பேரன்
गन्तृ	- செல்கிறவன்	बोद्धृ	- அறிகின்றவன்

வாக்யங்கள்

विश्वस्य कर्तारं नमामि ।

உலகைப் படைத்தவரை வணங்குகிறேன்.

कन्यायाः भर्ता गृहम् आगच्छति ।

பெண்ணின் கணவன் வீட்டிற்கு வருகிறான்.

किङ्कराः भर्तारम् अनुसरन्ति ।

வேலைக்காரர்கள் யஜமானனைப் பின்பற்றுகிறார்கள்.

याचकाः दातारं प्रशंसन्ति ।

யாசகர்கள் கொடையாளியைப் புகழ்கிறார்கள்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

सैन्यस्य नेता भटान् युद्धभूमिं नयति।

சேனையின் தலைவன் போர்வீரர்களை போர்க்களத்திற்கு அழைத்துச் செல்கிருன்.

व्यासः वसिष्ठमहर्षेः नप्ता।

வியாஸர் வஸிஷ்ட மகர்ஷியின் கொள்ளுப்பேரன்.

पापकृतः दुःखफलभोक्तारो भवन्ति।

பாபம் செய்தவர்கள் துன்பப் பலனை அனுபவிக்கிறவர்களாக ஆகிருர்கள்.

पुण्यकृतः सुखभोक्तारो भवन्ति।

புண்யம் செய்தவர்கள் இன்பத்தை அனுபவிக்கிறவர்களாக ஆகிருர்கள்.

जानकी स्वभर्त्रा राघवेण सह अरण्यमगमत्।

ஸீதை தன் கணவன் ராமனோடு காட்டிற்குச் சென்ருள்.

इन्द्रादयः देवाः सर्वेऽपि स्रष्टारं चतुर्मुखं शरणमगमन्।

இந்திரன் முதலான எல்லா தேவர்களும் உலகைப் படைக்கும் நான்முகனை சரணம் அடைந்தனர்.

॥ श्लोकः ॥

सुलभाः पुरुषा राजन् सततं प्रियवादिनः।
अप्रियस्य च पथ्यस्य वक्ता श्रोता च दुर्लभः॥

अन्वयः – हे राजन्, सततं प्रियवादिनः पुरुषाः सुलभाः।
अप्रियस्य पथ्यस्य च वक्ता श्रोता च दुर्लभः॥

பதவுரை :- हे राजन् - ஏ அரசனே! सततं - எப்பொழுதும், प्रियवादिनः இனிமையாகப் பேசுகின்ற, पुरुषाः - மனிதர்கள், सुलभाः- எளிதில் கிடைப்பவர்களாக, (सन्त - இருக்கிருர்கள்), अप्रियस्य பிரியமாக இல்லாவிடினும், पथ्यस्य-இதமானதை, वक्ता - பேசுபவனும், श्रोता च - கேட்பவனும், दुर्लभः - கிடைப்பதரிது.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

கருத்து :– இவ்வுலகில் இனிமையாகப் பேசுகிறவர்கள் எங்கும் கிடைப்பார்கள். ஆனல், பிரியமில்லாவிட்டாலும் கூட நன்மை தரக் கூடிய வார்த்தைகளைச் சொல்பவர்கள் அரிது.

।। वररुचिः ।।

अथ तस्य भार्या अभ्यन्तरात् आगच्छत् ।

பிறகு அவனுடைய மனைவி உள்ளேயிருந்து வந்தாள்.

सा मलिनं जीर्णं च वस्त्रं धारयन्ती आसीत् ।

அவள் அழுக்கானதும் கந்தையானதுமான ஆடையை அணிந்துகொண்டிருந்தாள்.

तस्याः शरीरम् उपवासेन अत्यन्तं कृशम् आसीत् ।

அவளுடைய சரீரம் பட்டினியால் மிகவும் இளைத்து இருந்தது.

एवंविधां तां दृष्ट्वा तौ उभौ अनमताम् ।

இப்படிப்பட்ட அவளைப் பார்த்து அவ்விருவரும் வணங்கினர்கள்.

सा तयोः आतिथ्यम् अकरोत् ।

அவள் அவ்விருவருக்கும் விருந்து அளித்தாள்.

अथ तौ तस्यै स्वीयं वृत्तान्तं न्यवेदयताम् ।

பிறகு அவ்விருவரும் அவளிடம் தங்களுடைய செய்தியைத் தெரியப்படுத்தினர்கள்.

साध्वी सा ताभ्याम् इमां कथाम् अकथयत्

சாதுவான கற்புள்ள அவள் அவ்விருவருக்கும் இந்தக் கதையைச் சொன்னாள்.

अस्मिन् नगरे शङ्करस्वामी नाम ब्राह्मणः आसीत् ।

இந்தப் பட்டிணத்தில் சங்கரஸ்வாமீ என்று பெயருள்ள அந்தணன் இருந்தான்.

अयं मम भर्ता उपवर्षः च तस्य पुत्रौ ।

இந்த என் கணவரும் உபவர்ஷனும் அவருடைய புதல்வர்கள்.

उपवर्षः कनिष्ठः, अयं ज्येष्ठः ।

உபவர்ஷர் இளையவர், இவர் மூத்தவர்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

पूर्वस्मिन् जन्मनि कृतेन पुण्येन उपवर्षः मेधावी भाग्यवान् च आसीत्।

முன் ஜன்மத்தில் செய்த புண்யத்தால் உபவர்ஷர் புத்திமானையும் பாக்யமுடையவராயும் இருந்தார்.

अयं तथा नासीत्। இவர் அவ்விதமாக இல்லை.

तेन नितरां निर्विण्णः अयं कदाचित् अरण्यं गत्वा तीव्रेण तपसा कार्तिकेयम् आराधयत्।

அதனால் மிகவும் வருத்தமடைந்த இவர் ஒரு சமயம் காட்டிற்குச் சென்று கடுந்தவத்தால் முருகப்பெருமானை வழிபட்டார்.

तेन प्रसन्नः स भगवान् अस्मै सर्वासु विद्यासु प्रावीण्यम् अयच्छत्।

அதனால் மகிழ்ச்சியடைந்த அந்தக் கடவுள் இவருக்கு எல்லா வித்யைகளிலும் கெட்டிக்காரனாக இருக்கும் தன்மையைக் கொடுத்தார்.

சொற்கள்

अभ्यन्तरात्	- உள்ளேயிருந்து
मलिनं	- அழுக்கானது
जीर्णं	- கந்தையானது
धारयन्ती	- (பெண்பால்) கட்டிக் கொண்டவளாக
अत्यन्तम्	- மிகவும்
उपवासः	- பட்டினி
एवंविधा	- (பெண்பால்) இப்படிப்பட்டவள்
उभौ	- இருவர்
आतिथ्यम्	- விருந்தினரை உபசரித்தல்
स्वीयम्	- தன்னுடையதான
वृत्तान्तः	- செய்தி (வார்தை)

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

न्यवेदयत् - தெரியப்படுத்தினன்

साध्वी - பதிவ்ரதை सती साध्वी पतिव्रता

भर्ता - கணவன்

कनिष्ठः - இளையவன்

ज्येष्ठः - மூத்தவன்

मेधावी - மேதையுள்ளவன்

नितरां - மிகவும்

निर्विण्णः - வருத்தமடைந்தவன்

अरण्यम् -காடு - अटवी, विपिनम् वनम्

कार्तिकेयः सुब्रह्मण्यः - முருகக் கடவுள்

आराधयति - வழிபடுகிறுன்.

प्रवीणस्य भावः प्रावीण्यम् - கெட்டிக்காரத்தனம்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

பாடம் - 45

"ऋ" வில் முடியும் ஆண்பால் சொற்கள்

	ஒருமை	இருமை	பன்மை
ஐந்தாம் வேற்றும	कर्तुः	कर्तृभ्यां	कर्तृभ्यः
ஆரும் வேற்றுமை	कर्तुः	कर्त्रोः	कर्तॄणाम्
ஏழாம் வேற்றுமை	कर्तरि	कर्त्रोः	कर्तृषु
எட்டாம் வேற்றுமை	हे कर्तः	हे कर्तारौ	हे कर्तारः

இதுபோலவே "ऋ"வில் முடியும் சொற்களின் சப்தங்களை எழுதிப் பழகிக்கொள்ள வேண்டும்.

சொற்கள்

रक्षितृ	- காப்பாற்றுகிறவன்	जेतृ	- ஜயிக்கிறவன்
गन्तृ	- செல்கிறவன்	द्रष्टृ	- பார்க்கிறவன்
हर्तृ	- அபஹரிக்கிறவன்	क्षेतृ	- போடுகிறவன்
शासितृ	- ஆளுகிறவன்	ताडयितृ	- அடிக்கின்றவன்
भक्षयितृ	- சாப்பிடுகிறவன்	द्वेष्टृ	- வெறுக்கின்றவன்

வாக்யங்கள்

पितरि रामस्य परमः आदरः ।

ராமனுக்குத் தந்தையிடம் மிகுந்த மரியாதை இருக்கிறது.

विश्वस्य स्रष्टुः इच्छा अलङ्घनीया ।

உலகத்தைப் படைத்தவருடைய விருப்பம் மீற முடியாதது.

वीरः द्वेष्टॄणाम् उत्साहं न सहते ।

வீரன் வெறுப்பவர்களின் உத்ஸாஹத்தைப் பொறுப்பதில்லை.

भिक्षुकाः दातृभ्यः धनं विन्दन्ति ।

பிச்சைக்காரர்கள் கொடையாளிகளிடமிருந்து பணத்தைப் பெறுகிறார்கள்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

पितुः भ्राता पितृव्यः । தந்தையின் ஸஹோதரன் சிற்றப்பன்.

भीमस्य भ्रातरि अर्जुने कर्णः शरान् अक्षिपत् ।

பீமனுடைய ஸஹோதரனை அர்ஜுனனிடத்தில் கர்ணன் அம்புகளை எய்தான்.

श्रोतॄणां निर्बन्धात् सः कथाम् अकथयत् ।

கேட்பவர்களின் வற்புறுத்தலால் அவன் கதையைச் சொன்னான்.

अप्रियस्य अपि पथ्यस्य वक्तरि अलं क्रोधेन ।

பிரியமில்லாவிட்டாலும் ஹிதமானதைச் சொல்லுகின்றவனிடம் கோபங்கொள்ள வேண்டாம்.

नासुः लाभे अतीव उत्कण्ठा भारतवर्षीयाणाम् ।

இந்தியர்களுக்குக் கொள்ளுப்பேரனை அடைவதில் மிகுந்த ஆவல்.

भ्राता भगनीं जामातुः गृहं नयति ।

ஸஹோதரன் ஸகோதரியை மாப்பிள்ளையின் வீட்டிற்கு அழைத்துச் செல்கிறான்.

जानकी स्वभर्तुः तीक्ष्णं वचनं श्रुत्वा पावकं प्रविवेश ।

ஸீதை தன் கணவனுடைய க்ரூர வார்த்தையைக் கேட்டு அக்னியில் ப்ரவேசித்தாள்.

परद्रव्यापहर्त्रे राजा कुप्यति ।

பிறர் பொருளைத் திருடுகிறவனிடம் அரசன் கோபிக்கிறான்.

लक्ष्मीभर्तः ! सर्वदा अस्मान् रक्ष ।

ஹே லக்ஷ்மீநாயகனே! எப்பொழுதும் எங்களைக்காப்பாற்றும்.

॥ श्लोकः ॥

रक्षिता जीवलोकस्य धर्मस्य परिरक्षिता ।
रक्षिता स्वस्य धर्मस्य स्वजनस्य च रक्षिता ।

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

பதவுரை - (रामः -ராமன்), जीवलोकस्य - ஜீவலோகத்தினுடைய, रक्षिता -காவலன், धर्मस्य -தர்மத்தினுடைய, परिरक्षिता -சிறந்த காவலன், स्वस्य -தனது, धर्मस्य -தர்மத்தினுடைய, रक्षिता - காவலன், स्वजनस्य च தன்னைச் சேர்ந்தவர்களுக்கும், रक्षितः - காவலன்.

கருத்து :- இந்த ச்லோகத்தில் நாரதர் வால்மீகி முனிவருக்கு ஸ்ரீராமசந்திரனுடைய குணதிசயங்களை எடுத்துக் கூறுகிறார். ஸ்ரீராமன் உலகின் கண் வாழும் ஸகல ஜீவராசிகளையும் காக்கின்றவன். அறத்தை நன்கு நிலைநாட்டுகிறவன். தன்னுடைய தர்மத்தையும் பரிபாலிப்பவன் மற்றும் தன்னைச் சார்ந்தவர்களையும் காக்கின்றவன். இவ்வாறு ஸ்ரீமத் ராமாயணத்தின் முதல் ஸர்க்கத்தில் ஸ்ரீராமனுடைய குணங்கள் விரிவாக வர்ணிக்கப்பட்டுள்ளன.

॥ वररुचिः ॥

अथ च एनम् आदिशत् ।

பிறகு இவனைக் கட்டளையிட்டார்.

''यः खलु सकृत् श्रुतं धारयति तादृशं शिष्यम् आसाद्य अध्यापय''

इति ।''

எவன் ஒருவன் ஒரு தடவை கேட்டதை மனதில் வைத்துக் கொள்கிறானே அப்படிப்பட்ட சீடனை அடைந்து கற்றுக்கொடு'' என்று.

एवम् आदिष्टः अयं परमम् आनन्दम् अवाप्य त्वरितम् अत्र आगच्छत्।

இவ்வாறு கட்டளையிடப்பட்ட இவர் மிகுந்த மகிழ்ச்சி அடைந்து வேகமாக இங்கு வந்தார்.

आगत्य सर्वम् इमं वृत्तान्तं मह्यं निवेदितवान् ।

வந்து இந்த எல்லாச் செய்தியையும்எனக்குத் தெரியப்படுத்தினார்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

तदाप्रभृति तथाविधं शिष्यं प्रतीक्षमाणः सन् सर्वदा भगवन्तं कार्तिकेयं ध्यायन् वर्तते।

அது முதல் அப்படிப்பட்ட சீடனை எதிர்பார்த்துக் கொண்டு எப்பொழுதும் திருமுருகப்பெருமானைத் தியானித்துக் கொண்டு இருக்கிறார்.

यदि सकृत् श्रुतं धारयितुं शक्तः शिष्यः आगमिष्यति तर्हि युवयोः अपि विद्यालाभः भविष्यति इति।

ஒரு தடவை கேட்டதை மனதில் இருத்திக் கொள்ளும் ஆற்றலுள்ள சீடன் வருவானாகில் உங்கள் இருவருக்கும் கல்வியின் லாபம் கிடைக்கும்'' என்று.

तत् श्रुत्वा तौ व्याडीन्द्रदत्तौ तथाविधं बालम् अन्विष्यन्तौ पृथिवीम् अभ्राम्यताम्।

அது கேட்டு அந்த வியாடியும் இந்திர தத்தனும் அப்படிப்பட்ட பையனைத் தேடிக் கொண்டு பூமியைச் சுற்றினார்கள்.

अन्ततः कौशाम्बीनगरीम् आगत्य वररुचेः सदनम् अगच्छताम्।

கடைசியாக கௌசாம்பீ நகரத்திற்கு வந்து வரருசியின் வீட்டிற்குச் சென்றார்கள்.

आसाद्य च कञ्चित्कालं मार्गश्रमं विनोदयन्तौ आस्ताम्।

அடைந்து கொஞ்சநேரம் வழி நடந்த களைப்பைப் போக்கிக் கொண்டிருந்தார்கள்.

तद्गृहस्य समीपे नाटकशाला आसीत्।

அந்த வீட்டின் அருகில் நாடகமன்றம் இருந்தது.

तदानीं तत्र मृदङ्गस्य ध्वनिः श्रुतः।

அப்பொழுது அங்கு மிருதங்கத்தின் ஓசைகேட்டது.

तं श्रुत्वा बालः वररुचिः मातरम् अवदत्।

அது கேட்டுப் பையனை வரருசி தாயாரிடம் சொன்னான்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

अम्ब ! नाटकशालायां मम पितुः मित्रं नन्दः नाम नटः नाटकम् अभिनेष्यति।

தாயே ! நாடகமன்றத்தில் என் தந்தையின் நண்பனை நந்தன் என்ற ஆட்டக்காரர் நாடகத்தை நடிக்கப் போகிறார்.

दृष्ट्वा च यथाश्रुतं सर्वं तव अग्रतः वदिष्यामि इति।

பார்த்துவிட்டு கேட்டதையெல்லாம் உங்கள் முன்னிலையல் சொல்வேன்'' என்று.

சொற்கள்

सकृत् - ஒருதடவை अव्ययम्

आसाद्य - அடைந்து अव्ययम्

अध्यापय - கற்றுக்கொடு

त्वरितम् - வேகமாக अव्ययम्

निवेदितवान् - தெரியப்படுத்தினன்

तदाप्रभृति - அது முதல்கொண்டு

तथाविधः - அப்படிப்பட்ட

प्रतीक्षमाणः - எதிர்பார்த்துக் கொண்டு

ध्यायन् - தியானம் செய்துகொண்டு

सदनम् - வீடு

विद्यायाः लाभः विद्यालाभः - கல்வி லாபம்

श्रुतम् अनतिक्रम्य यथाश्रुतम् - கேட்டபடியே.

व्याडिः च इन्द्रदत्तः च व्याडीन्द्रदत्तौ - வ்யாடியும் இந்த்ர தத்தனும்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

ஸம்ஸ்க்ருத பாடமாலா

(நான்காம் மலர்)

பாடம் - 46

(ஏவல்வினை லோட்)

अहं नमानि	- நான் வணங்குவேனாக
आवां नमाव	- நாங்கள் இருவரும் வணங்குவோமாக
वयं नमाम	- நாங்கள் வணங்குவோமாக
त्वं नम	- நீவணங்கு
युवां नमतम्	- நீங்கள் இருவரும் வணங்குங்கள்
यूयं नमत	- நீங்கள் வணங்குங்கள்
सः नमतु	- அவன் வணங்கட்டும்
तौ नमताम्	- அவர்கள் இருவரும் வணங்கட்டும்
ते नमन्तु	- அவர்கள் வணங்கட்டும்
अहं नृत्यानि	- நான் ஆடுவேனாக
आवां नृत्याव	- நாங்கள் இருவரும் ஆடுவோமாக
वयं नृत्याम	- நாங்கள் ஆடுவோமாக
त्वं नृत्य	- நீஆடு
युवां नृत्यतम्	- நீங்கள் இருவரும் ஆடுங்கள்
यूयं नृत्यत	- நீங்கள் ஆடுங்கள்
सः नृत्यतु	- அவன் ஆடட்டும்
तौ नृत्यताम्	- அவர்கள் இருவரும் ஆடட்டும்
ते नृत्यन्तु	- அவர்கள் ஆடட்டும்
अहम् इच्छानि	- நான் விரும்புவேனாக

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

आवाम् इच्छाव - நாங்கள் இருவரும் விரும்புவோமாக
वयम् इच्छाम - நாங்கள் விரும்புவோமாக
त्वम् इच्छ - நீவிரும்பு
युवाम् इच्छतम् - நீங்கள் இருவரும் விரும்புங்கள்
यूयम् इच्छत - நீங்கள் விரும்புங்கள்
सः इच्छतु - அவன் விரும்பட்டும்
तौ इच्छेताम् - அவர்கள் இருவரும் விரும்பட்டும்
ते इच्छन्तु - அவர்கள் விரும்பட்டும்
अहं कथयानि - நான் சொல்வேனாக
आवां कथयाव - நாங்கள் இருவரும் சொல்வோமாக
वयं कथयाम - நாங்கள் சொல்வோமாக
त्वं कथय - நீசொல்வாயாக
युवां कथयताम् - நீங்கள் இருவரும் சொல்வீர்களாக
यूयं कथयत - நீங்கள் சொல்வீர்களாக
सः कथयतु - அவன் சொல்லட்டும்
तौ कथयताम् - அவர்கள் இருவரும் சொல்லட்டும்
ते कथयन्तु - அவர்கள் சொல்லட்டும்.

ஏவல் வினை धातु வுடன் கீழ்கண்ட प्रत्यय ங்களைச் சேர்ப்பதால் உண்டாகிறது.

	ஒருமை	இருமை	பன்மை
தன்மை	आनि	आव	आम
முன்னிலை	—	तम्	त
படர்க்கை	तु	ताम्	अन्तु

மற்ற தாதுக்களுக்கும் மேலே காட்டியுள்ளதுபோல் ரூபங்களை எழுதிப் பழகிக்கொள்ள வேண்டும்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

வாக்யங்கள்

बाल विद्यालयं गच्छ பையா பள்ளிக் கூடம் போ

अयोध्यां दूताः गच्छन्तु தூதர்கள் அயோத்திக்குச் செல்லட்டும்

रामः वनं गच्छतु ராமன் காட்டிற்குச் செல்லட்டும்

हे बालाः विनयं मा त्यजत

பையன்களே ! வணக்கத்தை விடாதீர்கள்

कथमहं भयङ्करे वने वसानि ।

எப்படி நான் பயங்கரமான காட்டில் வசிப்பேன்

प्रतिदिनं प्रातः सायं च पितरौ नम ।

தினந்தோறும் காலையிலும் மாலையிலும் தாய் தந்தையர்களை வணங்கு.

भवन्तः रामकथां कथयन्तु ।

நீங்கள் ராமருடைய கதையைச் சொல்லுங்கள்

उद्याने पुष्पाणां रामणीयकं पश्य ।

தோட்டத்தில் மலர்களின் அழகைப் பார்

त्वं जीव शरदः शतम् । நீநூறு வருஷம் வாழ்வாயாக

परस्य धनं मा चोरय । பிறர் பொருளைத் திருடாதே

बालाः ! प्रत्यहं गृहे पाठान् पठत ।

சிறுவர்களே ! தினந்தோறும் வீட்டில் பாடங்களைப் படியுங்கள்

हे मित्र ! तत्रैव तिष्ठ, अहमपि त्वया सह आगच्छामि ।

நண்பா ! அங்கேயே, நில், நானும் உன்னோடு கூட வருகிறேன்.

सर्वे जनाः सुखिनः भवन्तु ।

எல்லா ஜனங்களும் சுகத்தையுடையவர்களாக இருக்கட்டும்.

पर्जन्यः काले वर्षतु । மழை தகுந்த காலத்தில் பொழியட்டும்.

आवां प्रातःकाले देवं नमाव

நாமிருவரும் காலை வேளையில் கடவுளை வணங்குவோமாக.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

सत्यं जयतु नानृतम्।

உண்மை வெல்லட்டும், பொய் (வெல்ல) வேண்டாம்.

कृष्णः मां रक्षतु। கிருஷ்ணன் என்னைக் காப்பாற்றட்டும்.

॥ श्लोकः ॥

जयतु जयतु देवो देवकीनन्दनोऽयं
जयतु जयतु कृष्णो वृष्णिवंशप्रदीपः।
जयतु जयतु मेघश्यामलः कोमलाङ्गो
जयतु जयतु पृथ्वीभारनाशो मुकुन्दः॥

பதவுரை :- देवकीनन्दन :- தேவகியின் புதல்வனை; अयं देवः - இந்த கடவுள், जयतु - வெற்றியடையட்டும், वृष्णिवंशप्रदीपः - யாதவகுலப் பெரு விளக்கான, कृष्णः - கிருஷ்ணன், मेघश्यामलः - மேகம் போல் கருப்பானவனும், कोमलाङ्गः - மெல்லிய அங்கங்களை உடையவனுமான (கிருஷ்ணன்), जयतु - வெற்றியடையட்டும், पृथ्वीभारनाशः - பூ பாரத்தை அழிக்கின்ற, मुकुन्दः - கிருஷ்ணன், जयतु - வெற்றியடையட்டும், जयतु - வெற்றியடையட்டும்.

விளக்கம் - देवक्याः नन्दनः देवकीनन्दनः - தேவகியின் புதல்வன், वृष्णिवंशस्य प्रदीपः - वृष्णिवंशप्रदीपः - விருஷ்ணி வம்சத்தினுடைய பெருவிளக்கு, யாதவ குலத்தை விளங்கச் செய்கின்றவன். मेघः इव श्यामः - मेघश्यामः - மேகம் போல் கருப்பானவன்., कोमलानि अङ्गानि यस्य सः कोमलाङ्गः - எவனுடைய அங்கங்கள் மெல்லியவைகளாக இருக்கின்றனவோ அவன். पृथ्व्याः भारः - पृथ्वीभारः - பூமியின் பாரம் பூபாரம், तस्य नाशः - அதை அழிப்பவன் पृथ्वीभारनाशः।

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

கருத்து :- குலசேகர ஆழ்வார் என்ற விஷ்ணு பக்தர் முகுந்தமாலை என்ற ஒரு அரிய துதிப் பாடலை இயற்றி யுள்ளார். அதிலிருந்து இந்த ச்லோகம் எடுக்கப்பட்டுள்ளது. இதில் जय् என்ற தாதுவின் लिट् ரூபம் பல தடவைகள் உபயோகிக்கப்பட்டுள்ளது. துஷ்டர்களை அழித்து சிஷ்டர் களைக்காப்பாற்ற விஷ்ணு பகவான் தேவகியின் மைந்தனாகத் தோன்றி யாதவ குலத்தை விளங்கச் செய்தார். அவர் நீருண்ட மேகம் போல் கருத்த மேனியையும் அழகிய அங்கங்களையும் உடையவராகத் திகழ்ந்தார். துஷ்டர்களையழித்து பூபாரத்தைக் குறைத்த அப்பெருமான் என்றும் வெற்றியுடன் விளங்கு வாராக என்பது இச்சுலோகத்தின் பொருள்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

பாடம் - 47

"இ"யில் முடியும் பெண்பால் சொற்கள்

	ஒருமை	இருமை	பன்மை
முதல் வேற்றுமை	मतिः	मती	मतयः
இரண்டாம் வேற்றுமை	मतिम्	मती	मतीः
மூன்றும் வேற்றுமை	मत्या	मतिभ्याम्	मतिभिः
நான்காம் வேற்றுமை	मत्यै मतये	मतिभ्याम्	मतिभ्यः

இதுபோலவே மற்ற "இ"யில் முடியும் பெண்பால் சொற்களின் வேற்றுமைகளை எழுதிப் பழகிக்கொள்ள வேண்டும்.

சொற்கள்

भूमिः	- பூமி	अनुरक्तिः	- அன்பு
कान्तिः	- அழகு, ஒளி	कीर्तिः	- புகழ்
कृतिः	- செயல், நூல்,	गतिः	- நடை
जातिः	- சாதி, இனம்	धृतिः	- தைரியம்
नीतिः	- நீதி	प्रकृतिः	- இயற்கை
प्रीतिः	- அன்பு	बुद्धिः	- அறிவு
भक्तिः	- பக்தி	भूतिः	- ஐச்வர்யம், செல்வம்
मुक्तिः	- மோக்ஷம்	मूर्तिः	- உருவம்
रतिः	- இன்பம்	रात्रिः	- இரவு
वृत्तिः	- தொழில்	श्रुतिः	- வேதம்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

வாக்கியங்கள்

नृपतिः भूमिं पालयति

அரசன் பூமியைக் காப்பாற்றுகிருன்

सुजनस्य कीर्तिः लोकेषु प्रसरति

நல்ல மனிதனுடைய புகழ் உலகங்களில் பரவுகிறது.

सङ्कटे धीरः धृतिं न त्यजति।

ஆபத்தில் வீரன் தைர்யத்தை விடுவதில்லை

कीर्तिं पालय

புகழைக் காப்பாற்று.

जननी प्रीत्या सुतम् आश्लिष्यति

தாயார் அன்புடன் மகனைக் கட்டிக்கொள்கிருள்

भक्तः मुक्तये देवं भजति।

பக்தன் மோக்ஷத்திற்காகக் கடவுளை பஜிக்கிருன்

वाल्मीकेः कृतिं कुशलवौ अगायताम्

வால்மீகியின் நூலை குசனும் லவனும் பாடினர்கள்.

बुधाः मूर्खाणां स्तुतिं न गणयन्ति।

அறிவாளிகள் முட்டாள்களுடைய துதிகளைப் பொருட்டுபடுத்துகிறதில்லை

प्रकृतयः नृपम् अनुसरन्ति।

மந்திரிகள் அரசனைப் பின்பற்றுகிருர்கள்.

अहं चन्द्रस्य कान्तिं पश्यामि

நான் சந்திரனுடைய ஒளியைப் பார்க்கிறேன்

इक्षुः निसर्गतः मधुरः।

கரும்பு இயற்கையாகத் தித்திப்பாக இருக்கிறது.

नृपः नीत्या जनान् परिपालयति

அரசன் நீதியால் ஜனங்களை நன்ருகக் காப்பாற்றுகிருன்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

।। वररुचिः ।।

तत् श्रुत्वा व्याडीन्द्रदत्तौ विस्मितौ अभवताम्।

அதுகேட்டு வ்யாடியும் இந்திரதத்தனும்
ஆச்சர்யமடைந்தவர்களாக ஆனர்கள்.

वसुदत्ता अपि ''सत्यम् अयं बालः वदति।

வசுதத்தையும் ''உண்மையை இந்தப் பையன் பேசுகிறான்.

सकृत् श्रुतम् अर्थं धारयितुं शक्नोति''

ஒருதரம் கேட்ட விஷயத்தை மனதில் இருத்திக்
கொள்வதற்குச் சக்தியுடையவனாக இருக்கிறான்''

इति अवदत् என்று கூறினாள்

तत् परीक्षितुं व्याडीन्द्रदत्तौ वररुचिना सह नाटकशालाम् अगच्छताम्।

அதைப் பரீக்ஷிப்பதற்காக வ்யாடியும் இந்திர தத்தனும்
வரருசியுடன் நாடகசாலைக்குச் சென்றார்கள்.

वररुचिः तत्र नाटकं समग्रं दृष्ट्वा गृहम् अगच्छत्।

வரருசி அங்கு நாடகம் முழுவதையும் பார்த்து விட்டு
வீட்டிற்கு வந்தான்.

तत् दृष्ट्वा व्याडीन्द्रदत्तौ अतिप्रीतौ अभवताम्।

அதைப் பார்த்து வ்யாடியும் இந்திர தத்தனும் மிகவும்
மகிழ்ச்சியடைந்தவர்களாக ஆனர்கள்.

अथ तौ आत्मवृत्तान्तं वररुचेः जनन्यै न्यवेदयताताम्।

பிறகு அவ்விருவரும் தங்களுடைய செய்தியை
வரருசியினுடைய தாயாருக்குத் தெரியப்படுத்தினர்கள்.

वर्षोपाध्यायस्य समीपे विद्याध्ययनाय वररुचिं प्रेषय।

வர்ஷோபாத்யாயரிடம் கல்வி கற்பதற்காக வரருசியை அனுப்பு.

इति तौ प्रार्थयताम् என்று அவ்விருவரும் வேண்டினர்கள்.

सा अपि तथा तं प्रेषयत्।

அவளும் அப்படியே அவனை அனுப்பினாள்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

अथ तौ वररुचिं पाटलीपुत्रम् अनयताम्।

பிறகு அவ்விருவர்களும் வரருசியைப் பாடலீ புரத்திற்கு அழைத்துச் சென்ருர்கள்.

तत्र तौ वर्षोपाध्यायम् उपसृत्य अयं बालः सकृत् श्रुतम् अर्थं धारयति इति वररुचिम् अदर्शयताम्।

பிறகு அவ்விருவர்களும் வர்ஷோபாத்யாயரை அணுகி ''இந்தப் பையன் ஒரு தரம் கேட்ட விஷயத்தை மனதில் வைத்துக்கொள்கிருன்'' என்று வரருசியைக் காட்டினர்கள்.

सः तान् त्रीनपि अपाठयत्।

பிறகு அவர் அம்மூவரையும் படிக்கச் செய்தார்

अथ ते क्रमेण सर्वान् वेदान् अपठन्।

பிறகு அவர்கள் முறையாக எல்லா வேதங்களையும் படித்தார்கள்.

तेषु वररुचिः सर्वेषु शास्त्रेषु प्राज्ञतमः अभवत्।

அவர்களுக்குள் வரருசி எல்லா சாஸ்திரங்களிலும் மிகவும் கெட்டிக்காரனக இருந்தான்.

अध्ययनानन्तरं गुरवे दक्षिणा दातव्या।

படித்த பிறகு ஆசிரியருக்கு தக்ஷிணை கொடுக்க வேண்டும்.

ते त्रयः अपि वर्षोपाध्यायम् अपृच्छन्।

அம்மூவருமே வர்ஷோபாத்யாயரைக் கேட்டார்கள்.

कियती गुरुदक्षिणा दातव्या इति।

எவ்வளவு குருதக்ஷிணை கொடுக்க வேண்டும் என்று.

सः अवदत् कोटिं यच्छ इति।

அவர் சொன்னர் ஒரு கோடி கொடு என்று

तत् आकर्ण्य ते दुःखिता अभवन्।

அதைக் கேட்டு அவர்கள் வருத்தம் அடைந்தவர்களாக ஆனர்கள்.

अहो कष्टम्। அந்தோ கஷ்டம்!

प्रभूता इयं दक्षिणा। இந்தத் தக்ஷிணை மிகவும் அதிகம்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

कथं दास्यामः । எப்படி கொடுப்போம்.

इयत् प्रभूतं धनं कुतः अधिगमिष्यामः ।

இவ்வளவு அதிகமான பணத்தை எங்கிருந்து அடைவோம்?

इति चिरम् अचिन्तयन् என்று நீண்டநேரம் யோசித்தார்கள்.

तदानीम् अयोध्यायां नन्दो नाम नृपः अभवत् ।

அப்பொழுது அயோத்தியில் நந்தன் என்ற அரசன் இருந்தான்.

सः महाधनिकः अभवत् ।

அவன் பெரும் பணக்காரனாக இருந்தான்.

ते त्रयः शिष्याः तं धनं याचितुम् अयोध्याम् अगच्छन् ।

அந்த மூன்று சீடர்களும் அவனிடம் பணத்தைக் கேட்பதற்கு அயோத்திக்குச் சென்றார்கள்.

சொற்கள்

शक्नोति - சக்தியுள்ளவனாக இருக்கிறான்

समग्रं - முழுவதையும்,

अग्रतः - முன்னால் (அவ்யயம்)

आत्मनः वृत्तान्तः तम् आत्मवृत्तान्तम् - தன்னுடைய செய்தியை

विद्यानाम् अध्ययनम् विद्याध्ययनम् - கல்விகளைக் கற்றல்

कियती - எவ்வளவு, इयत् - இவ்வளவு

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

பாடம் - 48

"இ"யில் முடியும் பெண்பால் சொற்கள்

	ஒருமை	இருமை	பன்மை
ஐந்தாம் வேற்றுமை	मत्याः, मतेः	मतिभ्याम्	मतिभ्यः
ஆரும் வேற்றுமை	मत्याः, मतेः	मत्योः	मतीनाम्
ஏழாம் வேற்றுமை	मत्यां, मतौ	मत्योः	मतिषु
எட்டாம் வேற்றுமை	हे मते	हे मती	हे मतयः

இதுபோலவே மற்ற "இ"யில் முடியும் பெண்பால் சொற்களின் வேற்றுமைகளை எழுதிப் பழகிக்கொள்ள வேண்டும்.

சொற்கள்

दुष्कृतिः	- தீய செயல்	प्रतिकृतिः	- உருவம்,
बुद्धिः	- புத்தி	वसतिः	- வசிக்குமிடம்
सृष्टिः	- படைப்பு	स्तुतिः	- புகழ், துதி
स्मृतिः	- ஸ்ம்ருதி, நினைவு	उत्पत्तिः	- உற்பத்தி
प्रपत्तिः	- சரண் அடைதல்	भीतिः	- பயம், அச்சம்
नतिः	- வணக்கம்	पुष्टिः	- புஷ்டி
दृष्टिः	- பார்வை	तुष्टिः	- சந்தோஷம்
क्षितिः	- பூமி	स्थितिः	- இருப்பு
शान्तिः	- அமைதி	अवनतिः	- அவமதிப்பு
उन्नतिः	- மேன்மை	विरक्तिः	- பற்றின்மை

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

வாக்கியங்கள்

मदनः रतेः वल्लभः। மன்மதன் ரதியின் கணவன்

सृष्ट्याः पालकः ईश्वरः । படைப்பின் காவலன் கடவுள்

बुद्धेः प्रकर्षः कीर्त्ये भवति ।

புத்தியின் மேன்மை புகழுக்காக ஆகிறது.

सःभूमौ निषीदति । அவன் பூமியில் உட்காருகிருன்.

मूर्खाणां स्तुतीः निन्दाः वा न गणयन्ति बुधाः ।

முட்டாள்களுடைய துதிகளையோ நிந்தைகளையோ அறிவாளிகள் பொருட்படுத்துவதில்லை.

साधुः सुकृतीनां फलम् अनुभवति ।

நல்லவன் நற்காரியங்களின் பலனை அனுபவிக்கிருன்.

स्मृतिषु धर्मः कथ्यते। ஸ்ம்ருதிகளில் தர்மம் சொல்லப்படுகிறது.

नृपस्य सचिवाः नीत्यां कुशलाः सन्ति ।

அரசனுடைய மந்திரிகள் நீதியில் கெட்டிக்காரர்களாக இருக்கிருர்கள்.

धृतिः नराणां परमं भूषणम् ।

தைர்யம் மனிதர்களுக்குச் சிறந்த அணி

यक्षाणां वसतिः अलका । அலகை யக்ஷர்களின் வசிப்பிடம்

युद्धे जनाः शान्तिं न अधिगच्छन्ति ।

போரில் ஜனங்கள் அமைதி அடைவதில்லை

विरक्त्या महान्तः गृहं त्यक्त्वा वनं गच्छन्ति ।

வைராக்யத்திஞல் மஹான்கள் வீட்டை விட்டுவிட்டு காட்டிற்குச் செல்கிருர்கள்.

उपन्यासमण्डपे श्रोतारो जनाः क्षितौ उपविशन्ति ।

உபந்யாஸ மண்டபத்தில் கேட்கும் ஜனங்கள் பூமியில் உட்காருகிருர்கள்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

वने सिंहस्य गर्जितं श्रुत्वा भीत्या मृगाः धावन्ति ।

நிகழ்கால வினையெச்சங்கள்

कुर्वत् - செய்து கொண்டு
गच्छत् - சென்று கொண்டு
चोदयत् - ஏவிக்கொண்டு
जयत् - ஜயித்துக்கொண்டு
पश्यत् - பார்த்துக்கொண்டு
वसत् - வசித்துக்கொண்டு
नयत् - அழைத்துச் சென்றுகொண்டு
भवत् - இருந்துகொண்டு

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

रक्षत् - காப்பாற்றிக்கொண்டு
वदत् - பேசிக் கொண்டு
जीवत् - வாழ்ந்துகொண்டு
त्यजत् - தியாகம் செய்துகொண்டு
दहत् - எரித்துக்கொண்டு
नमत् - வணங்கிக்கொண்டு
पचत् - சமைத்துக்கொண்டு
इच्छत् - விரும்பிக்கொண்டு
विशत् - நுழைந்துகொண்டு
सृजत् - படைத்துக்கொண்டு
पिबत् - குடித்துக்கொண்டு
दिशत् - காட்டிக்கொண்டு

वाक्यानि - வாக்யங்கள்

जयतः शत्रून् मा उपेक्षस्व

வெற்றியடைந்து கொண்டிருக்கின்ற பகைவர்களைப் பொருட்படுத்தாமல் இருக்காதே.

कश्चित् शृगालः नगरोपान्ते भ्राम्यन् नीलीभाण्डे अपतत्

ஒரு நரி பட்டணத்தின் எல்லையில் சுற்றிக் கொண்டு நீலச்சாயப் பாத்திரத்தில் விழுந்தது.

वसुदेवगृहे वसन् कृष्णः अम्बरात् अवतरन्तं नारदम् अपश्यत्

வசுதேவருடைய வீட்டில் வசித்துக்கொண்டிருந்த கிருஷ்ணன் ஆகாயத்திலிருந்து இறங்கி வந்து கொண்டிருந்த நாரதரைப் பார்த்தான்.

सहानुजः गच्छन् रामः कौशिकेन प्रचोदितः लोकपीडनतत्परां ताटकाम् अवधीत्

தம்பியுடன் சென்று கொண்டிருந்த ராமன் விசுவாமித்ரரால் தூண்டப்பட்டவுடன் உலகத்தைத் துன்புறுத்துவதில் ஈடுபட்ட தாடகையைக் கொன்றான்.

कृषितः नास्ति दुर्भिक्षम्

உழுதுகொண்டிருக்கின்றவனுக்குப் பஞ்சம் இல்லை.

नगरे वसन्तं मित्रं द्रष्टुम् अहं गच्छामि

நகரத்தில் வசிக்கும் நண்பனைப் பார்க்க நான் செல்கிறேன்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

अहं देवालये देवं पश्यन्नेव अस्मि

நான் தேவாலயத்தில் ஸ்வாமியைப் பார்த்துக் கொண்டே இருக்கிறேன்.

इदानीं द्वौ अपि वीरौ युद्धं कुर्वन्तौ वर्तेते

இப்பொழுது இரு வீரர்களும் சண்டைசெய்து கொண்டு இருக்கிறார்கள்.

क्षीरं पिबन्तं शिशुं प्रीत्या माता पश्यति

பால் குடித்துக் கொண்டிருக்கிற குழந்தையை ப்ரீதியுடன் தாயார் பார்க்கிறாள்.

कथा

रात्रौ इतस्ततः सञ्चरन् कश्चित् शृगालः कूपे अपतत्

இரவில் இங்குமங்கும் திரிந்துகொண்டு ஒரு நரி கிணற்றில் விழுந்தது.

तस्मात् उत्तरितुं तस्य शक्तिः न आसीत्

அதிலிருந்து மேலே வருவதற்கு அத்கு வலிமை இல்லை.

सः कथञ्चित् पुरःपादाभ्यां यत्किञ्चिदालम्ब्य आप्रभातम् अन्तरेव अवर्तत

அது எப்படியோ முன்னங்கால்களால் எதையோ பிடித்துக் கொண்டு விடியற்காலம் வரையில் உள்ளேயே இருந்தது.

प्रभाते गृहस्य किङ्करी जलम् उद्धर्तुं तं कूपम् अगच्छत्

காலையில் வீட்டு வேலைக்காரி தண்ணீர் எடுப்பதற்காக அந்த கிணற்றிற்குச் சென்றாள்.

सा तत्र रज्जुं घटे बद्ध्वा अन्तः मोक्तुम् अवनमन्ती तत्र स्थितं शृगालम् अपश्यत्

அவள் அங்கு கயிற்றைக் குடத்தில் கட்டி உள்ளே விடுவதற்காக குனிந்துகொண்டு அங்கு இருந்த நரியைப் பார்த்தாள்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

ततः सा गत्वा गृहे स्थितान् पुरुषान् आह्वयत्

பிறகு அவள் சென்று வீட்டில் இருந்த மனிதர்களை அழைத்தாள்.

ते कूपतीरमागत्य घटीयन्त्रपात्रे उभयतः रज्जुं बद्ध्वा अन्तः अमुञ्चन्

அவர்கள் கிணற்றின் கரைக்கு வந்து ஏற்றப் பாத்திரத்தின் இருபக்கங்களிலும் கயிற்றைக் கட்டி அதை உள்ளே விட்டார்கள்.

जलेन साकं सः शृगालः पात्रे अपतत्

தண்ணீருடன் கூட அந்த நரி பாத்திரத்தில் விழுந்தது.

परन्तु पादान् प्रसार्य चक्षुषी निमील्य मृताभिनयं कुर्वन् सः जले काष्ठवत् अप्लवत्

ஆனால் கால்களை நீட்டிக் கொண்டு கண்களை மூடிக்கொண்டு இறந்ததுபோல் நடித்துக்கொண்டு அது தண்ணீரில் கட்டை போல் மிதந்தது.

सर्वे तं मृतम् अमन्यन्त

எல்லோரும் அது இறந்ததென்று நினைத்தார்கள்.

एवं मन्यमानाः ते तत्पात्रम् उद्धृत्य जलेन सह तं भूमौ अपावर्जयन्

இவ்வாறு எண்ணிக்கொண்டு அவர்கள் அந்தப் பாத்திரத்தை வெளியே எடுத்துத் தண்ணீருடன் அதை பூமியில் கொட்டினர்கள்.

स तु क्षणं तथा स्थित्वा पश्यत्सु एव सर्वेषु उत्थाय वेगेन गत्वा सन्निहितम् इक्षुक्षेत्रं प्राविशत्

அது வோவெனில் சிறிது நேரம் அவ்வாறு இருந்து விட்டு எல்லோரும் பார்த்துக் கொண்டிருக்கும்பொழுதே எழுந்திருந்து வேகமாகச் சென்று அருகில் உள்ள கரும்பு வயலில் நுழைந்து விட்டது.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

श्लोकः - சுலோகம்

गच्छन् पिपीलिका याति योजनानां शतान्यपि।
अगच्छन् वैनतेयोऽपि पदमेकं न गच्छति॥

पदच्छेदः — गच्छन्, पिपीलिका, याति, योजनानां, शतानि, अपि, अगच्छन्, वैनतेयः, अपि, पदं, एकं, न, गच्छति॥

अन्वयः – गच्छन् पिपीलिका योजनानां शतानि अपि याति। अगच्छन् वैनतेयः एकं पदमपि न गच्छति।

पदार्थः — गच्छन् - சென்றுகொண்டிருக்கிற, पिपीलिका - எறும்பு, योजनानां शतानि अपि - நூற்றுக் கணக்கான யோஜனைகள் கூட, याति - செல்கிறது. अगच्छन् - சென்று கொண்டிராத, वैनतेयः - கருடன், एकं पदम् अपि - ஒரு அடி கூட, न गच्छति - போகிறதில்லை.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

பாடம் - 59

नकारान्तः पुंलिङ्गः 'राजन्' शब्दः

	ஒருமை	இருமை	பன்மை
1ம் வேற்றுமை	राजा	राजानौ	राजानः
2ம் வேற்றுமை	राजानम्	राजानौ	राज्ञः
3ம் வேற்றுமை	राज्ञा	राजभ्याम्	राजभिः
4ம் வேற்றுமை	राज्ञे	राजभ्याम्	राजभ्यः
5ம் வேற்றுமை	राज्ञः	राजभ्याम्	राजभ्यः
6ம் வேற்றுமை	राज्ञः	राज्ञोः	राज्ञाम्
7ம் வேற்றுமை	राज्ञि, राजनि	राज्ञोः	राजसु
8ம் வேற்றுமை	हे राजन्	हे राजानौ	हे राजानः

नकारान्तः पुंलिङ्गः 'आत्मन्' शब्दः

	ஒருமை	இருமை	பன்மை
1ம் வேற்றுமை	आत्मा	आत्मानौ	आत्मानः
2ம் வேற்றுமை	आत्मानम्	आत्मानौ	आत्मनः
3ம் வேற்றுமை	आत्मना	आत्मभ्याम्	आत्मभिः
4ம் வேற்றுமை	आत्मने	आत्मभ्याम्	आत्मभ्यः
5ம் வேற்றுமை	आत्मनः	आत्मभ्याम्	आत्मभ्यः
6ம் வேற்றுமை	आत्मनः	आत्मनोः	आत्मनाम्
7ம் வேற்றுமை	आत्मनि	आत्मनोः	आत्मसु
8ம் வேற்றுமை	हे आत्मन्	हे आत्मानौ	हे आत्मानः

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

शब्दाः - சொற்கள்

अन्तरात्मन् அந்தராத்மா	अश्मन् கல்
ब्रह्मन् பிரம்மா	महिमन् பெருமை
मूर्धन् தலை	विश्वकर्मन् விச்வகர்மா
गरिमन् கனமான தன்மை	लघिमन् சிறுமை

वाक्यानि - வாக்யங்கள்

ब्रह्मा जगत् असृजत् பிரம்மா உலகைப் படைத்தார்

यथा राजा तथा प्रजाः

எப்படி அரசனே அதுபோலவே மக்களும்.

अश्मभिः अश्वस्य गतिः कुण्ठिता

கற்களால் குதிரையின் நடை குன்றிவிட்டது.

जगत्कर्तुः महिम्नां फलं सर्वत्र दृश्यते

உலகைப் படைத்தவரின் பெருமைகளின் பலன் எங்கும் காணப்படுகிறது.

जनस्य कल्याणाय यतमानेन रामेण आत्मा क्लेशम् उपानीयत

உலகின் நன்மைக்காக முயற்சிக்கும் இராமனல் ஆன்மா துன்பத்தையடையும்படி செய்யப்பட்டது.

अश्मना निर्मितं दुष्टानां हृदयं परकीयस्य दुःखस्य श्रवणेन न कदापि द्रवति

கல்லால் செய்யப்பட்டது போன்ற தீயவர்களின் நெஞ்சம் பிறருடைய துன்பத்தைக் கேட்பதால் ஒருக் காலும் இளகுவதில்லை.

अज्ञानात् आत्मनः विनाशाय एव राज्ञा दशरथेन व्याली इव कैकेयी आत्मनः गृहे निवेशिता

அறியாமையால் தன்னழிவிற்காகவே அரசனை தசரதரால் ஸர்ப்பம்போல் கைகேயீ தன்னுடைய வீட்டில் நுழையும்படி செய்யப்பட்டாள்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

कुसुमस्तबकः सर्वेषां मूर्ध्नि वर्तते

பூங்கொத்து எல்லோருடைய தலையிலும் இருக்கிறது.

आत्मा एव आत्मनः बन्धुः தான் தான் தனக்கு உறவு.

विश्वकर्मणा अमरावती निरमीयत

விச்வகர்மவால் அமராவதீ சிருஷ்டிக்கப்பட்டது.

श्लोकः

आत्मनो मुखदोषेण बद्ध्यन्ते शुकशारिकाः ।
बकास्तु नैव बध्यन्ते मौनं सर्वार्थसाधनम् ।।

पदच्छेदः — आत्मनः मुखदोषेण बद्ध्यन्ते शुकशारिकाः ।
बकाः तु न एव बद्ध्यन्ते मौनं सर्वार्थसाधनम् ।

अन्वयः — शुकशारिकाः आत्मनः मुखदोषेण बद्ध्यन्ते ।
बकास्तु नैव बद्ध्यन्ते । मौनं सर्वार्थसाधनम् ।

பதவுரை :- शुकशारिकाः - கிளிகளும் மைனக்களும், आत्मनः - தன்னுடைய, मुखदोषेण - வாயின் தீங்கால், बद्ध्यन्ते - கட்டப்படுகின்றன. बकाः तु - கொக்குகளோ என்றால், नैव बद्ध्यन्ते - கட்டப்படுவதேயில்லை. मौनं - வாய் திறவாமை, सर्वार्थसाधनम् - எல்லா விஷயத்தையும் சாதிக்கக் கூடியது.

கருத்து :- கிளிகளும் மைனக்களும் இனிமையாகப் பாடுகின்றன. அதனால் அவைகளைப் பிடித்துக் கூட்டில் அடைத்து வைக்கிறார்கள். ஆனால் கொக்குகள் இனிமையாகப் பாடுவதில்லை. ஆகையால் அவைகள் தங்கள் விருப்பம் போல் பறந்து செல்கின்றன. பேசாமல் இருப்பதாலேயே எல்லாக் கார்யங்களையும் சாதித்துக் கொள்ளலாம்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

पिबन्ति नद्यः स्वयमेव नाम्भः

स्वयं न खादन्ति फलानि वृक्षाः ।

अदन्ति सस्यं न च वारिवाहाः

परोपकाराय सतां विभूतयः ।।

पदच्छेदः — पिबन्ति नद्यः स्वयम् एव न अम्भः स्वयं न खादन्ति फलानि वृक्षाः ।
अदन्ति सस्यं न च वारिवाहाः परोपकाराय सतां विभूतयः ।।

अन्वयः — नद्यः स्वयमेव अम्भः न पिबन्ति । वृक्षाः फलानि स्वयं न खादन्ति ।
वारिवाहाः च सस्यं न अदन्ति । सतां विभूतयः परोपकाराय ।

பதவுரை :— नद्यः - ஆறுகள், स्वयम् एव - தாங்களே, अम्भः - தண்ணீரை, न पिबन्ति - குடிக்கிறதில்லை, वृक्षाः - மரங்கள், फलानि - பழங்களை, स्वयं - தானே, न खादन्ति - தின்கிறதில்லை, वारिवाहाः - மேகங்கள், सस्यं - பயிரை, न खादन्ति - சாப்பிட கிறதில்லை. सतां - நல்லவர்களுடைய, विभूतयः - செல்வம், परोपकाराय - பிறருடைய நன்மைக்காகவே இருக்கிறது.

கருத்து :- ஆறுகள் தாங்களே தண்ணீரைக் குடிப்பதில்லை. அந்தத் தண்ணீர் பிறருடைய நன்மைக்காகவே உபயோகப் படுகிறது. மரங்கள் தங்களுடைய பழங்களைத் தாங்களே தின்பதில்லை. அவைகளை மற்றவர்களே சாப்பிடுகிறார்கள். மேகங்கள் தான்யங்களைத் தாங்களே தின்பதில்லை. அவைகள் மற்றவர்களுக்காகவே பயன்படுகின்றன. இதுபோலவே நல்லவர்களுடைய செல்வங்கள் எல்லாம் பிறருடைய நன்மைக்காகவே பயன்படுகின்றன.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

पुष्पधन्वानं मन्मथं त्रिनेत्रः परमशिवः नेत्राग्नि अदहत्

புஷ்பத்தை வில்லாகக் கொண்ட மன்மதனை முக்கண்ணனான பரமசிவன் நெற்றிக் கண்ணால் எரித்து விட்டார்.

रामशर्मणः त्रयः पुत्राः तिस्रः कन्यकाश्च सन्ति

ராம சர்மாவுக்கு மூன்று பிள்ளைகளும் மூன்று பெண்களும் இருக்கிறார்கள்.

हे गुरो, गोपालशर्मा अहं भवन्तम् अभिवादये

ஹே குரோ, கோபால சர்மாவென்ற நான் உங்களை வணங்குகிறேன்.

अस्मात् ग्रामात् नदीं गन्तुं द्वौ अध्वानौ वर्तेते ।

இந்தக் க்ராமத்திலிருந்து நதிக்குச் செல்வதற்கு இரண்டு வழிகள் இருக்கின்றன.

महेश्वरस्य मूर्ध्नि गङ्गा चन्द्रश्च वर्तेते

பரமசிவனுடைய சிரஸ்ஸில் கங்கையும் சந்திரனும் இருக்கிறார்கள்.

अतः तस्य गङ्गाधरः इति चन्द्रमौलिः इति च नाम

அதனால் அவருக்கு கங்காதரர் என்றும் சந்திரமௌளி என்றும் பெயர்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

பாடம் - 60

नकारान्तः पुंलिङ्गः 'गुणिन्' शब्दः

	ஒருமை	இருமை	பன்மை
1ம் வேற்றுமை	गुणी	गुणिनौ	गुणिनः
2ம் வேற்றுமை	गुणिनम्	गुणिनौ	गुणिनः
3ம் வேற்றுமை	गुणिना	गुणिभ्याम्	गुणिभिः
4ம் வேற்றுமை	गुणिने	गुणिभ्याम्	गुणिभ्यः
5ம் வேற்றுமை	गुणिनः	गुणिभ्याम्	गुणिभ्यः
6ம் வேற்றுமை	गुणिनः	गुणिनोः	गुणिनाम्
7ம் வேற்றுமை	गुणिनि	गुणिनोः	गुणिषु
8ம் வேற்றுமை	हे गुणिन्	हेगुणिनौ	हे गुणिनः

இலக்கணம்

गुणिन् என்ற சொல்லுக்குக் குணங்களையுடையவன் என்று பொருள். இது गुण என்ற சொல்லுடன் इन् என்ற விகுதியைச் சேர்ப்பதால் உண்டாகிறது. இதை.

गुणाः अस्य सन्ति என்று பிரித்துக்கொள்ள வேண்டும். அதாவது குணங்கள் இவனிடம் இருக்கின்றன என்பதால் गुणिन् என்ற சொல் கிடைக்கிறது.

धनम् अस्य अस्ति इति धनी பணத்தையுடையவன். இது போலவே பல சொற்களை நாம் உண்டுபண்ணலாம்.

சொற்கள்

अनुजीविन् - வேலைக்காரன்

उत्सङ्गवर्तिन् - மடியில் இருப்பவன்

कुशलिन् - நலமுள்ளவன்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

क्षेत्रगामिन् - புண்யத் தலங்களுக்கு யாத்திரை செய்பவன்
पक्षिन् - பறவை
प्रियवादिन् - பிரியமாகப் பேசுகிறவன்
मेधाविन् - அறிவுடையவன்
शिखरिन् - மலை
स्वामिन् - யஜமானன்
भोगिन् - பாம்பு, இன்பங்களை யனுபவிப்பவன்
मानिन् - மரியாதையுள்ளவன், மானமுள்ளவன்
अपराधिन् - குற்றவாளி
कञ्चुकिन् - அரசனுடைய அந்தப்புரத்தில் வேலை பார்ப்பவன்
क्षयिन् - குறைந்து போகிறவன்
प्राणिन् - ப்ராணி
फलाशिन् - பழம் தின்பவன்
भाविन् - பின்பு வரப்போகின்றது
योगिन् - யோகி
शूलिन् - சிவ பெருமான்
रोगिन् - நோயாளி

வாக்கியங்கள்

योगिनः फलाशिनः भवन्ति
யோகிகள் பழங்களைச் சாப்பிடுபவர்களாக இருக்கிறார்கள்.
अपराधिनं मा क्षमस्व
குற்றவாளியை மன்னிக்காதே.
अनुजीविने कुप्यति भर्ता
யஜமானன் வேலைக்காரனிடம் கோபித்துக் கொள்கிறான்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

राजन् कुशली भव

அரசே, நலமாக இரு.

कञ्चुकी राज्ञाम् अन्तःपुराधिकृतः पुरुषः

கஞ்சுகி அரசர்களுடன் அந்தப்புரத்தில் அமர்த்தப்பட்ட மனிதன்.

भाविनः अनर्थान् ज्ञातुं न समर्थः अस्ति जनः

மனிதன் பின்பு வரப்போகின்ற தீங்குகளை அறிவதற்குச் சக்தியற்றவன்.

क्षेत्रगामिना वर्त्मना गच्छन्तं यात्रिकम् अपश्यत्

புண்யஸ்தலத்திற்குச் செல்லும் வழியாகப் போய்க் கொண்டிருக்கும் மனிதனைப் பார்த்தான்.

श्रीषेणस्य राज्ञः महिषी सूर्यं चन्द्रं च आत्मनः उत्सङ्गवर्तिनौ अपश्यत्

ஸ்ரீஷேணன் என்ற அரசனுடைய மனைவி சூர்யனும் சந்த்ரனும் தன்னுடைய மடியில் உட்கார்ந்திருப்பவர்களாகப் பார்த்தாள்.

अपराधिनः पुरुषान् दण्डयन्तु राजानः

குற்றவாளிகளான மனிதர்களை அரசர்கள் தண்டிக்கட்டும்.

प्राणिनाम् उपकाराय एव साधूनां जगति जीवितम्

ப்ராணிகளின் உபகாரத்திற்காகவே உலகில் நல்லவர்களின் வாழ்க்கை.

प्रियवादिनां प्रियवादित्वं दैन्यं मन्यते शठः

இனிமையாகப் பேசுகிறவர்களின் இனிமையாகப் பேசுந்தன்மையை கோழைத்தனம் என்று துஷ்டன் எண்ணுகிறான்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

कथा

अस्ति कस्मिंश्चिद् वनोद्देशे बहूनां बकानां निवासभूतः वटपादपः

ஒரு காட்டுப் ப்ரதேசத்தில் பல கொக்குகளுக்கு இருப்பிடமாக ஒரு ஆலமரமிருந்தது.

तस्य कोटरे कृष्णसर्पः प्रतिवसति स्म

அதன் பொந்தில் ஒரு கருநாகம் வசித்துவந்தது.

स च बकबालकान् भक्षयन् कालम् अनयत्

அதுவும் கொக்குக் குஞ்சுகளைத் தின்றுகொண்டு காலம் கழித்துவந்தது.

अथ एकः बकः स्वशिशूनां नाशेन दुःखितः सरस्तीरम् आसाद्य बाष्पपूर्णलोचनः अधोमुखः अतिष्ठत्

பிறகு ஒரு கொக்கு தன்னுடைய குஞ்சுகளின் நாசத்தால் துயருற்றுக் குளக்கரையை அடைந்து கண்ணீர் நிரம்பிய கண்களுடன் தலைகுனிந்துகொண்டு நின்றது.

तं तदवस्थं दृष्ट्वा कुलीरकः प्राह

அந்த நிலமையிலுள்ள அதைப் பார்த்து நண்டு சொல்லிற்று.

किं एवं विलपसि ஏன் இம்மாதரி அழுகிறாய்.

सः अवदत् அது சொல்லிற்று.

मम बालकाः कोटरवासिना सर्पेण भक्षिताः

என்னுடைய குஞ்சுகள் பொந்தில் வசிக்கின்ற பாம்பால் தின்னப்பட்டன.

तत्कथय यद्यस्ति कश्चिदुपायः तद्विनाशाय

ஆகையால் அதன் அழிவிற்கு ஏதாவது உபாயம் உண்டா என்று சொல்.

तदाकर्ण्य कुलीरकः अचिन्तयत् அதைக்கேட்டு நண்டு நினைத்தது.

अयं तावद् अस्माकं सहजवैरी இதுவோவெனில் நம்மிடம் இயற்கையாகவே பகையுடையது.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

अतः तथा उपदेशं प्रयच्छामि, यथा न केवलं सर्पः किन्तुः अन्ये बकाः अपि सर्वे संक्षयम् आप्नुवन्ति

ஆகையால் எவ்வாறு பாம்புமட்டுமல்லாமல் மற்ற எல்லாக் கொக்குகளும் நாசமடையுமோ அப்படிப்பட்ட உபதேசத்தைச் செய்கிறேன்.

एवं विचिन्त्य स कुलीरः वकम् अवदत्

இவ்வாறு எண்ணி அந்த நண்டு கொக்கிடம் சொல்லிற்று.

यद्येवं मत्स्यमांसशकलानि नकुलस्य बिलद्वारात् सर्पकोटरं यावत् प्रक्षिप

அப்படியாகில் மீன் மாமிஸத் துண்டுகளை கீரியின் பொந்திலிருந்து மாம்பின் பொந்து வரையில் போடு.

तदा नकुलः तन्मार्गेण गत्वा कृष्णसर्पं हनिष्यति

அப்பொழுது கீரி அவ்வழியாகச் சென்று கருநாகத்தைக் கொன்றுவிடும்.

अथ तथा अनुष्ठिते मत्स्यमांसानुसारिणा नकुलेन तं कृष्णसर्पं निहत्य तद्भक्षाश्रयाः सर्वे बकाः च शनैः शनैः भक्षिताः

பிறகு அவ்வாறு செய்யப்பட்டவுடன் மீன் மாமிஸத்தைப் பின்பற்றிவருகின்ற கீரியினால் அக்கருநாகம் கொல்லப்பட்டு அம்மரத்திலுள்ள எல்லாக் கொக்குகளும் மெள்ள மெள்ளக் கொல்லப்பட்டன.

शब्दाः

सहजवैरी இயற்கையான பகைவன்	बकः கொக்கு
वैरम् अस्य अस्ति इति वैरि பகையுள்ளவன்	नकुलः கீரி
शकलानि துண்டுகளை (bits)	कुलीरः நண்டு
हनिष्यति கொல்லும், கொல்வான்	कृष्णसर्पः கருநாகம்
अनुसारी பின் தொடர்கின்றவன்	यावत् வரையில்

मत्स्यानां मांसम् अनुसरति इति मत्स्यमांसानुसारी तेन।

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

பாடம் - 61

सकारान्तः पुंलिङ्गः वेधस् शब्दः

	ஒருமை	இருமை	பன்மை
முதல் வேற்றுமை	वेधाः	वेधसौ	वेधसः
இரண்டாம் வேற்றுமை	वेधसं	वेधसौ	वेधसः
மூன்றும் வேற்றுமை	वेधसा	वेधोभ्यां	वेधोभिः
நான்காம் வேற்றுமை	वेधसे	वेधोभ्यां	वेधोभ्यः
ஐந்தாம் வேற்றுமை	वेधसः	वेधोभ्यां	वेधोभ्यः
ஆரும் வேற்றுமை	वेधसः	वेधसोः	वेधसाम्
ஏழாம் வேற்றுமை	वेधसि	वेधसोः	वेधस्सु
எட்டாம் வேற்றுமை	हे वेधः	हे वेधसौ	हे वेधसः

இலக்கணம்

स வில் முடியும் சொற்களின் முதல் வேற்றுமை உருபு स् மறைந்துவிடும். स् என்பதற்கு முன்னிருக்கும் अ நீளும் சொல்லின் ஈற்றிலுள்ள स् என்பது விஸர்கமாக மாறும்.

உதாரணம் वेधस् + स् இங்கு स् என்பது மறைந்து वेधस् என்று வருகிறது. பிறகு वेधस् என்பதில் स् என்பதற்கு முன்புள்ள अ நீண்டு वेधास् என்று மாறுகிறது. பிறகு கடைசியிலுள்ள स् விஸர்க்கமாகமாறி वेधाः என்ற உருவத்தை அடைகிறது.

எட்டாம் வேற்றுமை ஒருமையில் स् என்பதற்கு முன்புள்ள अ தீர்க்கமாக ஆகாது.

இதுபோலவே स्ல் முடியும் எல்லா ஆண்பால் சொற்களுக்கும் சப்தங்கள் எழுதிப் பழகிக்கொள்ள வேண்டும்.

शब्दाः

चन्द्रमस् - சந்திரன் दुर्वासस् - துர்வாஸர் என்ற முனிவர்
दिवौकस् - தேவர் वनौकस् - காட்டில் வசிப்பவர்,

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

पुरा मुनयः वनौकसः आसन्
முன் காலத்தில் முனிவர்கள் காட்டில் வசிப்பவர்களாக இருந்தார்கள்.

देवान् दिवौकसः वदन्ति
தேவர்களை ஸ்வர்க்கத்தில் வசிப்பவர்கள் என்று சொல்கிறார்கள்.

उद्यन्तं चन्द्रमसं प्रेक्षस्व - உதிக்கின்ற சந்திரனைப் பார்.

दुर्वासाः पाण्डवानां वसतिं अगच्छत
துர்வாஸர் பாண்டவர்கள் வசிக்குமிடத்திற்குச் சென்றார்.

वेधाः लोकं असृजत् - பிரம்மா உலகத்தைப் படைத்தார்

वेधाः दिवौकसः प्रत्यवदत्
ப்ரம்மதேவர் தேவர்களுக்குப்பதில் சொன்னார்.

शकुन्तलायाः सख्यौ दुर्वाससः शापात् भीते अभवताम्
சகுந்தலையின் இரு தோழியரும் துர்வாஸருடைய சாபத்திலிந்து பயந்தவர்களாக ஆனார்கள்.

दिवौकसां पुरत वेधाः आविरभवत्
தேவர்களுக்கு முன்னல் ப்ரம்மா தோன்றினார்.

वनौकसः फलानि भक्षयन्ति
காட்டில் வசிப்பவர்கள் பழங்களைச் சாப்பிடுகிறார்கள்.

चन्द्रमसि कलङ्कः अस्ति
சந்திரனிடத்தில் களங்கம் இருக்கிறது.

॥ श्लोकः ॥

को धर्मो भूतदया किं सौख्यं नित्यमरोगिता जगति।
कः स्नेहः सद्भावः किं पाण्डित्यं परिच्छेदः ॥

पदच्छेदः —
कः धर्मः भूतदया किम् सौख्यम् नित्यम् अरोगिता जगति।
कः स्नेहः सद्भावः किम् पाण्डित्यम् परिच्छेदः ॥

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

अन्वयः —
कः धर्मः? भूतदया, जगति किं सौख्यं? नित्यं अरोगिता कः स्नेहः ? सद्भावः, किं पाण्डित्यं परिच्छेदः ॥

பதவுரை :- कः धर्मः - தர்மம் எது? धर्मस्य लक्षणं किम्? भूतदया - எல்லாப் ப்ராணிகளிடத்திலும் தயை காட்டுவது, सर्वप्राणिषु करुणा, जगति - உலகத்தில், किं सौख्यं - சுகத்தின் தன்மை எது? सुखस्य किं स्वरूपम्? नित्यं - எப்பொழுதும், अरोगिता - நோயற்ற தன்மை, நீரோகதா, कः எது, स्नेहः - நட்பு? स्नेहः किंरूपः? सद्भावः - நல்ல எண்ணம், सर्वभूतेषु सुखदुःखसमभाव एव स्नेहः, किं पाण्डित्यं எது புலமை? पाण्डित्यस्य स्वरूपं किं? परिच्छेदः - பகுத்தறிவு, कर्तव्याकर्तव्यनिर्णयः पाण्डित्यम्।

விக்ரஹ வாக்யங்கள்:- भूतेषु दया भूतदया । सुखस्य भावः सौख्यम् । सन् च असौ भावः च सद्भावः । पण्डितस्य भावः पाण्डित्यम्॥

கருத்து:- இவ்வுலகில் தர்மம் என்பது எது? எல்லா உயிர்களிடத்திலும் தயவு காட்டுவதுதான் தர்மம். சுகம் என்பதன் தன்மை என்ன? எப்பொழுதும் நோயில்லாமல் இருப்பதுதான் சுகம் நட்பு என்பது எது? எல்லோரிடமும் நல்ல எண்ணம் வைப்பதுதான் நட்பு புலமை என்பது எது? எதைச் செய்ய வேண்டும்? எதைத் தவிர்க்க வேண்டும்? என்று பகுத்தறிவதே புலமை.

तात्पर्यार्थः —

धर्मस्य लक्षणं किम्? सर्वेषां प्राणिनाम् उपरि करुणा एव धर्मः भवति । अस्मिन् लोके सुखस्य स्वरूपं किम्? अस्मिन् लोके सर्वदा नीरोगता एव सुखम् । स्नेहः किंरूपः? सर्वभूतेषु सुखदुःखसमभावः एव स्नेहः । पाण्डित्यस्य स्वरूपं किम्? कर्तव्याकर्तव्य निर्णय एव पाण्डित्यम्॥

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

सत्सङ्गः केशवे भक्तिः गङ्गाम्भसि निमज्जनम्।
असारे खलु संसारे त्रीणि साराणि भावयेत्।।

अन्वयः

असारे संसारे सत्सङ्गः केशवे भक्तिः गङ्गाम्भसि निमज्जनम् इति त्रीणि साराणि भावयेत् खलु।।

பதவுரை - असारे - ஸாரமில்லாத, துச்சே, संसारे - உலக வாழ்வில், जगच्चक्रे, सत्सङ्गः - நல்லவர்களின் சேர்க்கை, सङ्गिः सह समागमः, केशवे - விஷ்ணுவினிடத்தில், विष्णौ भक्तिः - பக்தி, प्रेमातिशयः, गङ्गाम्भसि - கங்கையின் நீரில், गङ्गाजले, निमज्जनम् - முழுகுதல், स्नानम् त्रीणि - இம்மூன்றையும், इति त्रीणि, साराणि சிறந்தவைகளாக, स्थिरफलानि, भावयेत् - நினைக்க வேண்டும், चिन्तयेत्, खलु - அல்லவா, ननु

विग्रहवाक्यानिः -

न विद्यते सारः यस्मिन् सः असारः तस्मिन् असारे। गङ्गायाः अम्भः गङ्गाम्भः तस्मिन् गङ्गाम्भसि।

கருத்துः - இந்த ஸாரமற்ற உலகில் நல்லவர்களின் நட்பும், விஷ்ணு பக்தியும், கங்காஸ்நானமும் தான் நிலையான பயனைத் தரக் கூடியவைகள்.

तात्पर्यार्थः -

अस्मिन् तुच्छे जगच्चक्रे सत्समागमः विष्णुभक्तिः गङ्गास्नानं इत्येतानि त्रीणि एव स्थिरफलानि सन्ति।।

குறிப்புः - ஸம்ஸ்க்ருதத்தில் எழுதவும் பேசவும் கற்றுக்கொள்வதற்காக ஸம்ஸ்க்ருதத்திலேயே பதவுரையும் கருத்தும் சேர்த்து எழுதப்பட்டிருக்கிறது. இது மாதிரியே அப்யாஸம் செய்வதால் கூடிய சீக்கிரத்தில் ஸம்ஸக்ருதத்திலேயே உரையாடலாம். எழுதவும் செய்யலாம்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

பாடம் - 62

सर्वनामानि - ப்ரதிப்பெயர்ச் சொற்கள்

ஸம்ஸ்க்ருத மொழியிலுள்ள முக்யமான ஸர்வ நாமங்கள்

सर्व-எல்லாம்,	इदम्-இது,	एतद्-இது,
यत्-எது,	तत्-அது,	अदस्-அது.
अस्मद्-நான்,	युष्मद्-நீ,	किम्-என்ன?

அவைகளுள் सर्व-சப்தத்தின் ரூபங்கள் கீழ்கண்டவாறு

अकारान्तः पुंलिङ्गः सर्वशब्दः

	ஒருமை	இருமை	பன்மை
முதல் வேற்றுமை	सर्वः	सर्वौ	सर्वे
இரண்டாம் வேற்றுமை	सर्वम्	सर्वौ	सर्वान्
மூன்றும் வேற்றுமை	सर्वेण	सर्वाभ्यां	सर्वैः
நான்காம் வேற்றுமை	सर्वस्मै	सर्वाभ्यां	सर्वेभ्यः
ஐந்தாம் வேற்றுமை	सर्वस्मात्	सर्वाभ्यां	सर्वेभ्यः
ஆரும் வேற்றுமை	सर्वस्य	सर्वयोः	सर्वेषाम्
ஏழாம் வேற்றுமை	सर्वस्मिन्	सर्वयोः	सर्वेषु

இலக்கணம்

அ வில் முடியும் सर्व சப்தத்திற்கும் மற்றுமுள்ள ஸாதாரண சப்தங்களுக்கும் சில மாறுபாடுகள் உள்ளன. सर्व சப்தம் முதல் வேற்றுமை பன்மையில் सर्वे என்ற ரூபத்தையடைகிறது. ஆனல் மற்ற சப்தங்கள் आः என்று முடிகின்றன. உதாரணம் रामाः இதுபோலவே நான்காம் வேற்றுமை ஐந்தாம் வேற்றுமை, ஏழாம் வேற்றுமை ஒருமைகளிலும் ஆரும் வேற்றுமை பன்மையிலும் இந்த சப்தம் மாறுபடுகிறது. இவற்றை நன்கு ஞாபகத்தில் வைத்துக்கொள்ள வேண்டும்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

सर्वः कुटुम्बी कल्ये वयसि अर्थान् लब्धु यतते - எல்லாக் குடும்பத்தினனும் இளம் வயதில் பொருள்களையடைய முயற்சி செய்கிருன்.

सर्वस्यापि द्वे सुमतिकुमती संपदापत्तिहत् - எல்லோருக்கும், செல்வத்திற்கும் ஆபத்திற்கும் காரணங்களான நல்ல புத்தி, தீய புத்தி என்ற இரண்டு புத்திகள் இருக்கின்றன.

ईश्वरः सर्वेषां भूतानां हृद्देशे तिष्ठति - கடவுள் எல்லா பிராணிகளுடைய இருதயக் கமலத்திலும் இருக்கிருர்.

सर्वे भद्राणि पश्यन्तु - सर्वे सन्तु निरामयः - எல்லோரும் நன்மைகளைக் காணட்டும். எல்லோரும் நோயற்றவர்களாக இருக்கட்டும்.

सर्वस्मै भोजनं यच्छ - எல்லோருக்கும் உணவு கொடு.

सर्वस्मात् यत् प्रियतरं तद्वद् - எது எல்லாவற்றைக் காட்டிலும் மிகப் பிரியமாக இருக்கிறதோ அதைச் சொல்.

॥ कथा ॥

शुभकृच्छुभमाप्नोति पापकृत्पापमश्नुते।
युधिष्ठिरः शुभं प्राप्तः नाशं प्राप्तः सुयोधनः॥

शुभकृत् - நன்மையைச் செய்கின்றவன், शुभं - நன்மையை, आप्नोति - அடைகிருன், पापकृत् - பாவத்தைச் செய்கிறவன், पापं - பாபத்தை, अश्नुते - அனுபவிக்கிருன். युधिष्ठिरः -தர்ம புத்திரன், शुभं - நன்மையை, प्राप्तः - அடைந்தான், सुयोधनः - துர்யோதனன், नाशं - அழிவை, प्राप्तः - அடைந்தான்.

पुरा चन्द्रवंश्यो विचित्रवीर्यो नाम नरपतिः आसीत् முன் ஒரு காலத்தில் சந்திரவம்சத்தைச் சேர்ந்த விசித்ரவீர்யன் என்ற ஒரு அரசன் இருந்தான்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

तस्य अम्बिका अम्बालिका इति द्वे भार्ये आस्ताम् - அவனுக்கு அம்பிகை, அம்பாலிகை என்ற இரு மனைவிகள் இருந்தார்கள்.

तत्र अम्बिकायां धृतराष्ट्रो जातः - அதில் அம்பிகையிடம் திருதராஷ்டிரன் பிறந்தான்.

अम्बालिकायां च पाण्डुः - அம்பாலிகையிடத்தில் பாண்டு பிறந்தான்.

धृतराष्ट्रस्य दुर्योधनादयः शतं पुत्राः अजायन्त - திருதராஷ்டிரனுக்குத் துர்யோதனன் முதலிய நூறு பிள்ளைகள் பிறந்தார்கள்.

पाण्डोः च युधिष्ठिरादयः पञ्च - பாண்டுவிற்கு யுதிஷ்டிரன் முதலிய ஐந்து புத்திரர்கள் பிறந்தார்கள்.

बाल्यात प्रभृति युधिष्ठिरः शुभाचारः बभूव - சிறு வயதிலிருந்தே யுதிஷ்டிரன் நல்லொழுக்கம் உள்ளவனாக இருந்தான்.

पापाचारः च दुर्योधनः- துர்யோதனன் தீய ஒழுக்க முள்ளவன்.

बाल्ये एव पुत्राणां पाण्डुः कालवशेन परलोकं गतः - பிள்ளைகள் சிறுவர்களாக இருக்கும்பொழுதே பாண்டு காலவசத்தால் மேலுலகம் சென்றான்.

अथापि धृतराष्ट्रः बालान् भ्रातृपुत्रान् प्रेम्णा अपोषयत् - அப்படியிருந்தும் திருதராஷ்டிரன் குழந்தைகளான தன்னுடைய சகோதரனின் பிள்ளைகளை அன்புடன் வளர்த்து வந்தான்.

दुष्टाशयः दुर्योधनः तु राज्यहेतोः कर्णादिसहितः तेषां गूढवधे बहुधा यत्नम् अकरोत् - தீய எண்ணமுள்ள துர்யோதனனோ எனில் ராஜ்யத்திற்காக கர்ணன் முதலியவர்களுடன் சேர்ந்து கொண்டு அவர்களை ரகசியமாகக் கொல்வதற்குப் பல முயற்சிகளை செய்தான்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

परं तेन चिन्तिताः सर्वे अपि उपायाः दिष्ट्या विफलाः एव जाताः- ஆனால் அவனால் நினைக்கப்பட்ட எல்லா உபாயங்களும் அதிர்ஷ்டவசமாக வீணாயின.

अथ कपटद्यूतेन तान् विजित्य देशात् निष्कासितवान् - பிறகு கபடமான சூதாட்டத்தால் அவர்களை வென்று நாட்டை விட்டுத் துரத்தினான்.

पापभीरुः युधिष्ठिरः भ्रातृभिः भार्यया च सह द्वादशवर्षाणि वने निवासम् अकरोत् - பாவத்திற்கு அஞ்சிய யுதிஷ்டிரன் சகோதரர்களுடனும் மனைவியுடனும் பன்னிரண்டு ஆண்டுகள் காட்டில் வசித்தான்.

परैरज्ञातश्च वर्षम् एकं विराटनगरे अवसत् - மற்றவர்களுக்குத் தெரியாமல் ஒரு ஆண்டு விராட நகரத்தில் வசித்தான்

चतुर्दशे वर्षे दुर्योधनम् अस्य स्वदायम् अयाचत - பதினான்காம் ஆண்டில் துரியோதனனை அடைந்து தனது பங்கைக் கேட்டான்.

दुर्योधनः पञ्च ग्रामानपि दातुं न अनुमेने - துரியோதனன் ஐந்து கிராமங்களைக் கூடக் கொடுக்க ஒப்புக்கொள்ளவில்லை.

अथ तयोः दारुणं युद्धं प्रावर्तत - பிறகு அவர்களுக்குள் பயங்கரமான போர் மூண்டது.

तत्र युधिष्ठिरः भगवतः कृपया दुर्योधनं विनाश्य स्वराज्यं प्राप्य भ्रातृभिः सह पृथिवीं चिरं शशाप -அதில் யுதிஷ்டிரன் பகவத் கிருபையால் துர்யோதனனையழித்து தனது ராஜ்யத்தைப் பெற்று சகோதரர்களுடன் நீண்டகாலம் ஆண்டுவந்தான்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

வாக்கியங்கள்

अयोध्यानगरवासिनः सर्वेपि जनाः रामं द्रष्टुं भरतेन साकं वनम् अगच्छन् -அயோத்யா நகரத்தில் வஸிக்கும் எல்லா ஜனங்களும் ராமனைப் பார்ப்பதற்காக பரதனுடன் கூட காட்டிற்குச் சென்றுர்கள்.

सर्वस्मिन्नपि समये सत्यमेव वद
எல்லா சமயத்திலும் உண்மையே பேசு.
कदाचिदपि असत्यं मा वद -
ஒருபொழுதும் பொய் சொல்லாதே.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

பாடம் - 63

सर्वनामानि - ப்ரதிப் பெயர்ச் சொற்கள்

मकारान्तः पुंलिङ्गः किम् शब्दः

	ஒருமை	இருமை	பன்மை
முதல் வேற்றுமை	कः	कौ	के
இரண்டாம் வேற்றுமை	कं	कौ	कान्
மூன்றும் வேற்றுமை	केन	काभ्यां	कैः
நான்காம் வேற்றுமை	कस्मै	काभ्यां	केभ्यः
ஐந்தாம் வேற்றுமை	कस्मात्	काभ्यां	केभ्यः
ஆறும் வேற்றுமை	कस्य	कयोः	केषाम्
ஏழாம் வேற்றுமை	कस्मिन्	कयोः	केषु

இலக்கணம்

किम् என்பதின் ரூபங்கள் सर्व சப்தத்தினுடைய ரூபங்களைப் போலவே உள்ளன. किम् என்பது கேள்விகள் கேட்பதற்கு மட்டுமே உபயோகிக்கப்படுகிறது. இதை ஆங்கிலத்தில் Interogative Pronoun என்று சொல்வார்கள்.

வாக்கியங்கள்

कः अत्र आगच्छति? - யார் இங்கு வருகிறான்?

कस्य इदं पुस्तकम्? - இந்தப் புத்தகம் யாருடையது?

कस्मात् नगरात् त्वम् आगच्छसि? -
எந்த நகரத்திலிருந்து நீவருகிறாய்?

रामः कस्य आज्ञाम् अपालयत्?
ராமன் யாருடைய கட்டளையைக் காப்பாற்றினான்?

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

कस्मिन् वृक्षे पुष्पाणि न सन्ति ?
எந்த மரத்தில் புஷ்பங்கள் இல்லை.

कस्मै मां दास्यसि? - என்னை யாருக்குக் கொடுப்பாய்?

कुम्भकर्णः कं वरम् अयाचत? -
கும்பகர்ணன் என்ன வரன் கேட்டான்?

प्रभुः रावणादिभ्यः कान् वरान् अयच्छत् ?-
ப்ரம்மதேவர் ராவணன் முதலியவர்களுக்கு என்ன வரங்களைக் கொடுத்தார்?

केन गौरवं प्राप्यते? - எதனல் மேன்மை அடையப்படுகிறது?

सर्वत्र कः पूज्यते? - எங்கும் யார் பூஜிக்கப்படுகிருன்?

॥ श्लोकः ॥

यस्य कस्य प्रसूतोऽपि गुणवान् पूज्यते नरः ।
धनुर्वांशविशुद्धोऽपि निर्गुणः किं करिष्यति ॥

पदच्छेदः-यस्य कस्य प्रसूतः अपि गुणवान् पूज्यते नरः । धनुः वंशविशुद्धः अपि निर्गुणः किं करिष्यति।

अन्वयः - गुणवान् नरः यस्य कस्य प्रसूतः अपि (लोकैः) पूज्यते । वंशविशुद्धः अपि धनुः (यदि) निर्गुणः (तदा) किं करिष्यति?

पदவுரை :- गुणवान्नरः - குணங்களையுடையமனிதன். गुणशालिमनुष्यः यस्य कस्य - யாருக்காவது, श्रेष्ठस्य अधमस्य वा वंशस्य प्रसूतः अपि - பிறந்தாலும் கூட, जातः अपि (लोकैः - மக்களால்) पूज्यते - மதிக்கப்படுகிருன், सम्मान्यते । वंशविशुद्धः अपि - நல்ல மூங்கிலையுடையதாக இருப்பினும் (நல்ல குலத்தில் பிறந்தவனக இருந்தாலும்) सुदृढवेणुनिष्पन्नः अपि

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

(शुद्धिमति अन्वये जातः अपि) निर्गुणः यदि - நாண் கயிறு இல்லாததாக இருப்பின் (நல்ல குணங்களற்றவனாக இருந்தால்) ज्याहीनः यदि (सौशील्यादिगुणरहितः यदि) किं करिष्यति - என்ன செய்யும்? (என்ன செய்வான்?) अर्थात् किम् अपि न करिष्यति -

விக்ரஹ வாக்யங்கள்:-

गुणाः अस्य सन्ति इति गुणवान्। वंशः विशुद्धः यस्य सः वंश विशुद्धः। निर्गतः गुणः यस्मात् सः निर्गुणः।

கருத்து :- ஒரு மனிதன் எந்தக் குலத்தில் பிறந்தாலும் நற்குணங்களை உடையவனாக இருந்தால் எல்லா மக்களாலும் பூஜிக்கப்படுகிறான். மக்கள் ஒருவனுடைய பிறப்பைப் பற்றிக் கவனியாமல் அவனுடைய குணங்களையே பாராட்டுகிறார்கள். நல்ல குலத்தில் பிறந்தவனாக இருந்தாலும் குணமற்றவன் என்ன செய்வான்? உதாரணமாக நல்ல மூங்கிலைக் கொண்டு ஒரு வில் தயாரிக்கப்பட்டுள்ளது இதில் குணமில்லாவிட்டால் அதாவது அதில் நாண் கயிறு கட்டப்படாமல் இருந்தால் அது என்ன செய்ய இயலும்? இதுபோலவே குணமற்றவனால் ஒரு பயனும் கிடையாது.

तात्पर्यार्थः - गुणशाली मनुष्यः श्रेष्ठस्य अधमस्य वा वंशस्य प्रसूतः भवतु। तस्य वंशमविगण्य लोकाः तस्य गुणानेव अभिनन्दन्ति। अतः तादृशं नरं ते पूजयन्ति। तत्र दृष्टान्तः यथा - सुदृढेन वंशेन चापः निर्मीयते। यदि तस्य गुणः न स्यात् अर्थात् ज्या न आरोपिता भवेत् तर्हि तादृशः गुणहीनः चापः किं कर्तुं शक्नुयात् तया निर्गुणेन मनुष्येण किं स्यादिति भावः॥

விமர்சனம் :- இந்த சுலோகத்தின் இரண்டாம் பகுதி மிகவும் விசேஷமானது. இங்கு குணமற்ற மனிதனால் யாதொரு பயனும் உண்டாகாது என்று விளக்க ஒரு வ்யதிரேக

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

த்ருஷ்டாந்தம் காட்டப்பட்டுள்ளது. இப்பகுதியில் वंशविशुद्धः निर्गुण என்ற பதங்களுக்கு ப்ரகிருதத்தில் நல்ல மூங்கிலுடையது. நாண்கயிறு இல்லாதது என்று பொருள்கள் கூற வேண்டும். இவ்வாறு இப்பதங்களின் பொருள்கள் கட்டுப்படுத்தப்பட்டிருப்பினும் இவைகள் வ்யங்க்யமாக மற்ற பொருள்களையும் காட்டுகின்றன. அதாவது உயர்ந்த குலத்தை உடையவனாக இருப்பினும், குணமற்றவன்" என்ற பொருள்களும் இப்பதங்களுக்கு உண்டு. இதனால் ப்ரக்ருதத்தில் நல்ல குலத்தில் பிறந்தவனாக இருந்தாலும் குணமற்றவன் என்ன செய்வான் என்ற த்வன்யார்த்தம் நன்கு விளங்குகிறது. எவ்வாறு நல்ல மூங்கிலிலிருந்து தயார் செய்யப்பட்ட வில்லாக இருந்தாலும் அது நாண் ஏற்றப்படாமலிருந்தால் பயன்படாதோ அவ்வாறே நல்ல குலத்தில் பிறந்தவனாக இருந்தபோதிலும் அவன் நற்குணமற்றவனாக இருப்பின் பயன்படமாட்டான் என்ற உபமாத்வனி இந்த சுலோகத்தில் தோன்றுகிறது. அதனால் இது மிகவும் உத்தமமான சுலோகம்.

இவ்வாறு நாம் சுலோகங்களைப் படிக்கும்பொழுது அவைகளின் உட்கருத்தையும் நன்கு ஆராய்ந்து படிக்க வேண்டும். அதனால் அவற்றை படிக்கும்பொழுது நமக்கு ஒரு அதிசயமான இன்பம் உண்டாகும்.

ஸம்ஸ்க்ருத எழுத்துக்கள்

ஸம்ஸ்க்ருத மொழி தேவ பாஷை என்று கூறப்படுகிறது.

संस्कृतं नाम दैवी वागन्वाख्या महर्षिभिः ।।

இது எந்த எழுத்துக்களில் எழுதப்படுகிறதோ அந்த எழுத்துக்களுக்கு தேவநாகரிலிபி என்று பெயர்.

ஆனால் இது தெலுங்கு, மலையாளம் முதலிய ப்ரதேசங்களில் அந்தந்த லிபியிலேயே எழுதப்படுகிறது.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

பாடம் - 64

सर्वनामानि - ப்ரதிப் பெயர்ச் சொற்கள்

दकारान्तः पुंलिङ्गः तद् शब्दः

	ஒருமை	இருமை	பன்மை
முதல் வேற்றுமை	सः	तौ	ते
இரண்டாம் வேற்றுமை	तं	तौ	तान्
மூன்றும் வேற்றுமை	तेन	ताभ्यां	तैः
நான்காம் வேற்றுமை	तस्मै	ताभ्यां	तेभ्यः
ஐந்தாம் வேற்றுமை	तस्मात्	ताभ्यां	तेभ्यः
ஆறும் வேற்றுமை	तस्य	तयोः	तेषाम्
ஏழாம் வேற்றுமை	तस्मिन्	तयोः	तेषु

இலக்கணம்

तद् பதத்தின் ரூபங்கள் सर्व சப்தத்தினுடைய ரூபங்களைப் போலவே உள்ளன. இதன் முதல் வேற்றுமை ஒருமை सः என்று மாறிவிடுகிறது. மற்ற வேற்றுமைகளில் இது त என்று தோன்றுகிறது. இது ஒருவனைச் சுட்டிக் காட்டுவதற்காக உபயோகப் படுத்தப்படுவதால் இதற்கு ஆங்கிலத்தில் Demonstrative Pronoun என்று பெயர்.

वाक्यानि - வாக்கியங்கள்

सः नरः तस्मात् ग्रामात् गृहम् आगच्छति - அந்த மனிதன் அந்த கிராமத்திலிருந்து வீட்டிற்கு வருகிறான்.

तं पुरुषम् अत्र आह्वय - அந்த மனிதனை இங்கு கூப்பிடு.

तान् वृषभान् दृष्ट्वा सः सिंहः अचिन्तयत् - அந்தக் காளைகளைப் பார்த்து அந்தச் சிங்கம் நினைத்தது.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

तस्मै याचकाय प्रभूतम् अन्नं यच्छ - அந்த யாசகனுக்கு நிறைய உணவு கொடு.

तस्य दशरथस्य चत्वारः पुत्राः आसन् -அந்த தசரதனுக்கு நான்கு பிள்ளைகள் இருந்தார்கள்.

तेषां नामधेयानि रामः, लक्ष्मणः भरतः शत्रुघ्नः इति - அவர்களுக்கு ராமன், லக்ஷ்மணன், பரதன், சத்ருக்னன் என்று பெயர்கள்.

तेषु रामः ज्येष्ठः अभवत् - அவர்களில் ராமன் மூத்தவனாக இருந்தான்.

ब्रह्मा तेभ्यः तान् वरान् दत्त्वा तत्र एव अन्तर्दधे -பிரம்மதேவர் அவர்களுக்கு அந்த வரங்களைக் கொடுத்துவிட்டு அங்கேயே மறைந்தார்.

तौ रामलक्ष्मणौ पितुः आज्ञां परिपालयन्तौ सीतया सह दण्डकारण्यम् अगच्छताम्- அந்த ராம லக்ஷ்மணர்கள் தந்தையின் கட்டளையைக் காப்பாற்றிக் கொண்டு ஸீதையுடன் தண்ட காரண்யம் சென்றார்கள்.

तेन कारणेन सः शठः नृपेण अदण्ड्यत - அந்தக் காரணத்தால் அந்த மனிதன் அரசனால் தண்டிக்கப் பட்டான்.

कथा

वञ्चकोऽपि पुमाँल्लोके कदाचिद्वञ्च्यते परैः ।
क्रीडता बालकेनैकस्तस्करोऽभूत्प्रतारितः ।।

लोके - உலகத்தில் वञ्चकः पुमान् अपि - (பிறரை) ஏமாற்றும் மனிதன் கூட, कदाचित् - சில சமயம், परैः மற்றவர்களால் वञ्च्यते - ஏமாற்றப்படுகிறான், क्रीडता - விளையாடுகின்ற, बालकेन - பையனால், एकः तस्करः - ஒரு திருடன், प्रतारितः अभूत् - ஏமாற்றப்பட்டவனாக ஆனான்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

गोपालः नाम बालः कूपस्य समीपे त्रिचतुरैः मित्रैः सह क्रीडन् आसीत् - கோபாலன் என்ற பையன் கிணற்றின் அருகில் மூன்று நான்கு நண்பர்களுடன் விளையாடிக் கொண்டு இருந்தான்.

तदा कश्चित् चोरः तं देशम् आजगाम - அப்பொழுது ஒரு திருடன் அந்த இடத்திற்கு வந்தான்.

आगच्छन्तं तम् अवलोक्य गोपालः यद्यपि भीतः तथापि बुद्ध्या तं वञ्चयितुं इच्छन् कूपस्य तीरं गतः - வருகின்ற அவனைப் பார்த்து கோபாலன் பயந்தவனாக இருந்தாலும் புத்தியால் அவனை ஏமாற்ற விரும்பி கிணற்றின் கரைக்குச் சென்றான்.

गत्वा च कूपोदकं पुनः पुनः पश्यन् आक्रन्दत् - சென்று கிணற்றின் நீரை அடிக்கடி பார்த்துக் கொண்டு கத்தினான்.

क्रन्दन्तं तं बालकम् उपसृत्य सः तस्करः ''रे बालक, किमर्थं क्रन्दसि?'' इति अपृच्छत् - கத்துகின்ற அந்த பையனை அணுகி அந்தத் திருடன் ''ஏ பையா, ஏன் கத்துகிறாய்'' என்று கேட்டான்.

तदा बालकः सगद्गदं तम् अवदत् - அப்பொழுது அந்த பையன் விம்மிக் கொண்டு அவனிடம் சென்றான்.

''आर्य ! अमूल्यः मम मुक्ताहारः मम मित्रेण कूपे प्रक्षिप्तः - ஐயா, விலைமதிக்கமுடியாத என்னுடைய முத்துமாலை என்னுடைய நண்பனால் கிணற்றில் போடப்பட்டது.

हारं विना यदि गृहं गमिष्यामि तदा मम मातापितरौ मां ताडयिष्यतः - மாலையில்லாமல் நான் வீட்டிற்குச் சென்றால் அப்பொழுது என்னுடைய தாய் தந்தையர்கள் என்னை அடிப்பார்கள்.

अतः किं करोमि? ஆகையால் என்ன செய்வேன்?

क्व गच्छामि - எங்கு செல்வேன்?

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

यदि त्वम् अस्मिन् कूपे अवतीयम् हारर्यं आदाय प्रयच्छसि तदा मातापितृभ्यां तव महत् पारितोषिकं दापयिष्यामि - நீஇந்தக் கிணற்றில் இறங்கி மாலையை எடுத்துக் கொடுப்பாயாகில் என் தாய் தந்தையர்களைக் கொண்டு உனக்கு மிகுந்த பரிசு கொடுக்கச் செய்வேன்'' इति என்று.

तत् श्रुत्वा सः मूढः तद्वाक्यं विश्वसन् वस्त्रादिकं तीरे निक्षिप्य कौपीनवस्त्रधारी कूपम् अवातरत्- அதைக் கேட்டு அந்த முட்டாள் அவன் வார்த்தையை நம்பி ஆடை முதலியவற்றைக் கரையில் வைத்துவிட்டு கோவணத்தைக் கட்டிக் கொண்டவனைக் கிணற்றில் இறங்கினான்.

बुद्धिमान् गोपालः तु मित्राणि अक्षिसंज्ञया धावयित्वा स्वयं चोरस्य वस्त्रादिकं गृहीत्वा सत्वरं पलायितः - அறிவுள்ள கோபாலனெவெனில் நண்பர்களைக் கண்ணடிப்பதனல் ஓடச் செய்து தானும் திருடனுடைய ஆடை முதலியவற்றை எடுத்துக் கொண்டு வேகமாக ஓடிவிட்டான்.

तस्करः तु अगाधे जले चिरम् अन्विष्य अपि हारम् अलभमानः कूपादुत्तीर्य बालं वस्त्रादिकं च अपश्यन् लज्जितः विस्मितः च स्वबुद्धिं निन्दन् बालं च प्रसंसन् यथागतं गतः - திருடனே என்றல் ஆழமான நீரில் நீண்டநேரம் தேடியும் முத்துமாலையை அடையாதவனைக் கிணற்றிலிருந்து மேலேவந்து பையனையும் தன்னுடைய ஆடை முதலியவற்றையும் காணுதவனய் வெட்கி ஆச்சர்யமடைந்து தன்னறிவை நிந்தித்துக் கொண்டும், பையனைப் புகழ்ந்துகொண்டும் வந்த வழியே சென்றான்.

ஸம்ஸ்க்ருத எழுத்துக்கள்

ஸம்ஸ்க்ருதத்தில் ஒன்பது உயிரெழுத்துக்களும் முப்பத்து மூன்று மெய்யெழுத்துக்களும் உள்ளன. அவற்றுள் உயிரெழுத்துக்களுக்கு ஸ்வரங்கள் என்றும் மெய்யெழுத்துக்களுக்கு வ்யஞ்ஜனங்கள் என்றும் பெயர். இவைகள் பதினான்கு சூத்ரங்களில் சொல்லப்பட்டுள்ளன. அவைகளுக்கு சிவசூத்ரங்கள் என்று பெயர்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

பாடம்-65

सर्वनामानि - ப்ரதிப் பெயர்ச் சொற்கள்

दकारान्तः पुंलिङ्गः यद् शब्दः

	ஒருமை	இருமை	பன்மை
முதல் வேற்றுமை	यः	यौ	ये
இரண்டாம் வேற்றுமை	यं	यौ	यान्
மூன்றும் வேற்றுமை	येन	याभ्यां	यैः
நான்காம் வேற்றுமை	यस्मै	याभ्यां	येभ्यः
ஐந்தாம் வேற்றுமை	यस्मात्	याभ्यां	येभ्यः
ஆரம் வேற்றுமை	यस्य	ययोः	येषाम्
ஏழாம் வேற்றுமை	यस्मिन्	ययोः	येषु

இலக்கணம்

यद् சப்தத்தின் ரூபங்கள் तद् சப்தத்தினுடைய ரூபங்களைப் போலவே உள்ளன. இதன் முதல் வேற்றுமை ஒருமை यः என்று மாறிவிடுகிறது. மற்ற வேற்றுமைகளில் இது य என்று தோன்றுகிறது. இந்த यद् என்ற சப்தமும் तद् என்ற சப்தமும் சேர்த்து உபயோகிக்கப்படுகின்றன. இது கேள்விகள் கேட்க உபயோகிக்கப்படுகிறதில்லை கேள்விகள் கேட்க किम् என்ற சப்தத்தைத்தான் உபயோகிக்க வேண்டும்.

உதாரணங்கள்

यः सुचरितैः पितरं प्रीणाति सः पुत्रः । எவன் நன்னடத்தைகளால் தந்தையை மகிழ்விக்கிறானே, அவன் மகன்.

यः दाशरथिः भूत्वा रणे रावणं हत्वा लोकान् अरक्षत् सः सर्वान् रक्षतु ।எவர் தசரதனுடைய மகனாகப் பிறந்து ராவணனைக் கொன்று உலகங்களைக் காப்பாற்றினாரோ அவர் அனைவரையும் காப்பாற்றட்டும்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

यस्मिन् जीवति बहवः जीवन्ति सः जीवतु। - எவன் வாழும் பொழுது (வாழ்வதனல்) பலர் வாழ்கிருர்களோ அவன் வாழட்டும்.

यः न विद्वान् न धार्मिकः तेन जातेन पुत्रेण कः अर्थः। - எவன் அறிவற்றவனுயும் தர்மம் செய்யாதவனுகவும் இருக்கிருனே அப்படிப்பட்ட பிள்ளே பிறந்ததால் என்ன பயன்?

येन जातेन वंशः समुन्नतिं याति सः जातः। - எவனுடைய பிறப்பால் வம்சம் மேன்மையடைகிறதோ அவனே பிறந்தவன்.

यस्य गृहात् अतिथिः भग्नाशः निवर्तते सः तस्मै दुष्कृतं दत्त्वा पुण्यमादाय गच्छति। - எவனுடைய வீட்டிலிருந்து விருந்தாளி ஆசைநிறைவேருதவனுகத் திரும்பிச் செல்கிருனே அப்படிப் பட்ட அவன் தன்னுடைய பாபத்தை அவனுக்குக் கொடுத்து விட்டுப் புண்யத்தை எடுத்துக் கொண்டு செல்கிருன்.

यस्मिन् देशे संमानः न, वृत्तिः न, बान्धवाः च न, कश्चित् विद्यागमः च न, तं देशं परिवर्जयेत्। - எந்த தேசத்தில் நல்ல மரியாதை இல்லேயோ, தொழில் இல்லேயோ உறவினர்கள் இல்லேயோ, ஒருவிதமான படிப்பும் இல்லேயோ, அந்த தேசத்தை விட்டுவிட வேண்டும்.

यं पुरुषं ह्यः तत्र अपश्यं तम् आह्वयामि। - எந்த மனிதனே நேற்று அங்கு பார்த்தேனே அவனேயே கூப்பிடுகிறேன்.

याभ्यां चौर्यं कृतं तौ पुरुषौ राजा अदण्डयत्। - எந்த இருவர்களால் திருடப்பட்டதோ அந்த இரண்டு மனிதர்களேயும் அரசன் தண்டித்தான்.

यैः मेदिनी उत्खाता, ये च कपिलस्य कोपेन दग्धाः तान् सागरस्य आत्मजान् भगीरथः गङ्गायाः जलेन उदधरत्। - எவர்களால் பூமி தோண்டப்பட்டதோ எவர்கள் கபிலருடைய கோபத்தால் எரிக்கப்பட்டார்களோ, அந்த ஸகரனுடைய பிள்ளேகளே பகீரதன் கங்கையின் நீரால் கரையேற்றினன்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

कथा

अस्ति श्रीपर्वते ब्रह्मपुराख्यं नगरम् । - ஸ்ரீ பர்வதத்தில் பிரம்மபுரம் என்ற பட்டணமிருந்தது.

एकदा तस्मात् नगरात् घण्टाम् आदाय वनमार्गेण पलायमानः कश्चन चारः व्याघ्रेण व्यापादितः । - ஒரு சமயம் அந்தப் பட்டணத்திலிருந்து மணியை எடுத்துக் கொண்டு காட்டின் வழியாக ஓடுகின்ற ஒரு திருடன் புலியால் கொல்லப்பட்டான்.

तस्य हस्तात् पतितां घण्टां गृहीत्वा वानराः सदा अवादयन् । - அவனுடைய கையிலிருந்து விழுந்த மணியை எடுத்துக் கொண்டு காட்டின் குரங்குகள் எப்பொழுதும் அடித்துவந்தன.

अविरतेन घण्टारवेण 'नगरसमीपस्थे वने घण्टाकर्णो नाम राक्षसः प्रतिवसति, सः जनान् व्यापादयति, सदा घण्टानादं च करोति' इति लोकवादः समजनि । - இடைவிடாத மணியோசையால் ''பட்டணத்தின் அருகிலுள்ள காட்டில் கண்டாகர்ணன் என்ற அரக்கன் வசிக்கிறான் அவன் மக்களைக் கொல்கிறான் எப்பொழுதும் மணியோசையையும் செய்கிறான்'' என்ற செய்தி கிளம்பிற்று.

तेन सर्वे जनाः नगरात् प्रद्रुताः । - அதனால் எல்லா மக்களும் நகரத்திலிருந்து ஓடிவிட்டார்கள்.

स्वबुद्ध्या विमृश्य यथार्थं ज्ञातवती काचन वृद्धा राजानम् उपेत्य 'मन्त्रशक्त्या घण्टाकर्णं विद्रावयिष्ये, यदि मन्त्रक्रियाकलापाय पर्याप्तं धनं दीयेत' इति उवाच । - தன் புத்தியால் யோசித்து உண்மையை அறிந்த ஒரு கிழவி அரசனை அணுகி மந்திரஜபம் முதலிய கார்யங்களைச் செய்வதற்கு போதுமான பணம் கொடுக்கப்பட்டால் கண்டாகர்ணனை மந்திர சக்தியால் ஓட்டிவிடுவேன் என்று சொன்னாள்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

राजा च तस्यै प्रभूतं धनम् अयच्छत्। - அரசனும் அவளுக்கு மிகுந்த பணத்தைக் கொடுத்தான்

सा महता आडम्बरेण देवतापूजादिकं कृत्वा वनं प्रविश्य वानरप्रियाणि फलानि तत्र अवाकिरत्। - அவளும் மிகுந்த ஆடம்பரத்துடன் தேவதைகளுக்குப் பூஜை முதலியவற்றைச் செய்து காட்டில் நுழைந்து குரங்களுக்குப் பிரியமான பழங்களை அங்கு இறைத்தாள்.

वानराः घण्टां प्रक्षिप्य फलानि आदाय अधावन्। - குரங்குகள் மணியைப் போட்டுவிட்டுப் பழங்களை எடுத்துக் கொண்டு ஓடிவிட்டன.

सा च वृद्धा घण्टां राज्ञः पुरतः निधाय घण्टाकर्णं विद्रावितं निवेद्य सर्वैः संमनिता बभूव। - அக்கிழவியும் மணியை அரசன் முன்வைத்து கண்டா கர்ணன் ஓட்டப்பட்டார் என்று அறிவித்து எல்லோராலும் போற்றப்பட்டவளாக ஆனாள்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

பாடம்-66

सर्वनामानि - ப்ரதிப் பெயர்ச் சொற்கள்

मकारान्तः पुंलिङ्गः इदम् शब्दः

	ஒருமை	இருமை	பன்மை
முதல் வேற்றுமை	अयं	इमौ	इमे
இரண்டாம் வேற்றுமை	इमं-एनं	इमौ-एनौ	इमान्-एनान्
மூன்றும் வேற்றுமை	अनेन-एनेन	आभ्यां	एभिः
நான்காம் வேற்றுமை	अस्मै	आभ्यां	एभ्यः
ஐந்தாம் வேற்றுமை	अस्मात्	आभ्यां	एभ्यः
ஆரும் வேற்றுமை	अस्य	अनयोःएनयोः	एषाम्
ஏழாம் வேற்றுமை	अस्मिन्	अनयोःएनयोः	एषु

இலக்கணம்

इदम् என்பது அருகிலுள்ள ஒருவனைச் சுட்டிக் காட்டுகின்றது. அதனல் இதற்கு ஆங்கிலத்தில் Demonstrative Pronoun என்று பெயர். இது इदमस्तु सन्निकृष्टं என்பதில் இருந்து விளங்குகிறது. இந்த சப்தத்திற்கு இரண்டாம் வேற்றுமை, மூன்றும் வேற்றுமை ஒருமை, ஆரும் வேற்றுமை இருமை, ஏழாம் வேற்றுமை இருமை இவைகளில் மற்றெரு ரூபம் வருகிறது. இந்த மாற்று ரூபங்கள் ஏற்கனவே ஒருதரம் इदम् என்ற சப்தத்தின் ரூபங்களை உபயோகித்த பின்னர் மறு தடவை இவைகளையே உபயோகிக்கும் பொழுது வருகின்றன. மறுமுறையாக உபயோகிக்கப்படும் ரூபங்களுக்கு अन्वादेशம் என்று பெயர். உதாரணம் :-

अनेन-व्याकरणम् अधीतम्, एनं छन्दः अध्यापय। - இவனல் இலக்கணம் படிக்கப்பட்டது. இவனுக்கு சந்தஸ் சாஸ்திரத்தைக் கற்றுக்கொடு.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

अनयोः पवित्रं कुलं, एनयोः प्रभूतं धनम्। - இவ்விருவர்களுடைய குலம் புனிதமானது. இவ்விருவர்களிடமும் மிகுந்த செல்வம் உள்ளது.

உதாரணங்கள்

इमे विहङ्गमाः मम जालं हरन्ति । -இந்தப் பறவைகள் என்னுடைய வலையைத் தூக்கிச் செல்கின்றன.

अस्मिन् विद्यालये वयं पठामः। - இந்தப் பள்ளிக் கூடத்தில் நாங்கள் படிக்கிறோம்.

अयम् अस्माकं विद्यालयः। - இது எங்களுடைய பள்ளிக் கூடம்

इमौ रामलक्ष्मणौ दशरथस्य आत्मजौ । - இந்த ராம லக்ஷ்மணர்கள் தசரதனுடைய புத்திரர்கள்

अस्य रामस्य पत्नीं सीतां रावणः अपाहरत् । - இந்த ராமனுடைய மனைவியான சீதையை ராவணன் அபகரித்தான்.

अस्मै विदुषे विप्राय दक्षिणां यच्छ। - இந்த அறிவாளியான பிராமணனுக்குத் தக்ஷிணை கொடு.

अनेन रामेण सर्वे शत्रवः निहताः। - இந்த ராமனால் எல்லா சத்ருக்களும் கொல்லப்பட்டார்கள்.

अस्मात् ग्रामात् सत्वरम् अपगच्छ। - இந்த கிராமத்திலிருந்து சீக்கிரம் விலகிச் செல்

अयं निजः परो वेति गणना लघुचेतसाम्। - அல்ப புத்தியுள்ளவர்களுக்கு இவன் என்னைச் சேர்ந்தவன் அல்லது இவன் அன்னியன் என்ற எண்ண முண்டாகிறது.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

संस्कृतभाषायाः वैशिष्ट्यं, सौष्ठवं च

ஸம்ஸ்க்ருத மொழியின் சிறப்பும் அழகும்

'सम्' पूर्वात् कृधातोः निष्पन्नः शब्दः ''संस्कृतशब्दः'' ஸம்ஸ்க்ருதம் என்ற சொல் ஸம்(நன்கு) என்ற உபஸர்க் கத்துடன் கூடிய கृ (செய்) என்ற வினைச் சொல்லிலிருந்து தோன்றியது.

संस्कृतभाषा देववाणी-भारती-विद्या इति पदैः आख्यायते । ஸம்ஸ்க்ருத மொழி தேவவாணீ-பாரதீ வித்யா என்ற சொற்களால் விளக்கப்படுகிறது.

प्रचलितासु विश्वभाषासु संस्कृतभाषा एव प्राचीनतमा । வழக்கிலுள்ள உலக மொழிகளில் ஸம்ஸ்க்ருத மொழிதான் மிகப் பழமையானது.

संस्कृतभाषातः प्राकृत - सेमेट्रिक् भाषाः निर्गताः । - ஸம்ஸ்க்ருத மொழியிலிருந்து ப்ராக்ருதம் செமென்டிக் மொழிகள் வந்தன.

तासां जननी संस्कतभाषा । - ஸம்ஸ்க்ருத மொழிதான் அவைகளின் தாய்

न केवलं तासां, अपि तु अखिलभाषाणां जननी संस्कृतभाषा एव। அவைகளுக்கு மட்டுமல்லாமல் மற்ற எல்லா மொழிகளுக்கும் ஸம்ஸ்க்ருத மொழிதான் தாய்.

अस्याम् एव भाषायाम् आध्यात्मिकविषये अनेके ग्रन्थाः विरचिताः सन्ति । - இந்த மொழியில்தான் வேதாந்த விஷயத்தைப் பற்றிப் பல நூல்கள் எழுதப்பட்டுள்ளன.

अस्यामेव भाषायां प्राचीनैः आचार्यैः दर्शनशास्त्रेषु एकतः जीवब्रह्मणोः प्रकृतेश्च अतीव हृदङ्गमं विवेचनं विहितम् । - இதே மொழியில்தான் முன்னிருந்த ஆசார்யர்களால் தர்சன சாஸ்திரங்களில் ஒருபுறம் ஜீவன், பிரம்மம் ப்ரக்ருதி இவைகளைப் பற்றிய மனதைக் கவரும் ஆராய்ச்சி செய்யப் பட்டுள்ளது.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

अपरतश्च धर्मशास्त्र - नीतिशास्त्र - कामशास्त्र - राजतन्त्र - शिल्पकलादिविषयानधिकृत्य भारतीयाचार्यैः अतीव रोचकाः चमत्कारकराश्च ग्रन्थाः विरचिताः । - மற்றெருபுறம் தர்ம சாஸ்திரம், நீதி சாஸ்திரம், காம சாஸ்திரம், ராஜநீதி சிற்பக்கலை முதலிய விஷயங்களைப் பற்றி இந்தியாவிலுள்ள ஆசார்யர்களால் மிகவும் மகிழ்ச்சி தரக் கூடியவைகளாயும் ஆற்றலுடையவைகளுமான நூல்கள் எழுதப்பட்டுள்ளன.

ललितसाहित्यविषयेऽपि रससिद्धैः कवीश्वरैः भास-कालिदास-भवभूति भारवि-प्रभृतिभिः अक्षय्यो निधिः परिपूरितः। - எளிய இலக்கிய விஷயத்திலும் ரஸங்களில் தேர்ச்சி பெற்ற சிறந்த கவிகளான பாஸன், காளிதாஸன், பவபூதி பாரவி முதலிய சிறந்த கவிகளால் அழிக்கமுடியாத செல்வம் நிறைக்கப்பட்டுள்ளது.

संस्कृतभाषायाः व्यावहारिकत्वम् आसीत् न वा ! - ஸம்ஸ்க்ருத மொழி வழக்கில் இருந்ததா இல்லையா?

अत्र उच्यते। - இங்கு (இதைப் பற்றிச்) சொல்லப் படுகிறது.

पाणिनेः अष्टाध्याय्यां सूत्रद्वयं वर्तते। - பாணினி மகர்ஷியின் அஷ்டாத்யாயீ என்ற இலக்கண நூலில் இரண்டு சூத்ரங்கள் உள்ளன.

दूराद्धूते च (8-2-84) प्रत्यभिवादेऽशूद्रे (8-2-83) इति सूत्राभ्यां प्लुतत्वविधानं संस्कृतभाषायाः व्यावहारिकत्वं प्रमाणयति। 'தூராத்தூதே ச' 'ப்ரத்யபிவாதே அசூத்ரே' என்ற இரண்டு சூத்ரங்கள் ஸம்ஸ்க்ருத மொழி வழக்கிலுள்ளது என்பதை எடுத்துக் காட்டுகின்றன.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

பாடம் - 67

सर्वनामानि - ப்ரதிப் பெயர்ச் சொற்கள்

दकारान्तः पुंलिङ्गः एतद् शब्दः

	ஒருமை	இருமை	பன்மை
முதல் வேற்றுமை	एषः	एतौ	एते
இரண்டாம் வேற்றுமை	एतम्-एनम्	एतौ-एनौ	एतान्-एनान्
மூன்றும் வேற்றுமை	एतेन-एनेन	एताभ्यां	एतैः
நான்காம் வேற்றுமை	एतस्मै	एताभ्यां	एतेभ्यः
ஐந்தாம் வேற்றுமை	एतस्मात्	एताभ्यां	एतेभ्यः
ஆரும் வேற்றுமை	एतस्य	एतयोः-एनयोः	एतेषाम्
ஏழாம் வேற்றுமை	एतस्मिन्	एतयोःएनयोः	एतेषु

இலக்கணம்

एतद् என்பது அருகிலுள்ள ஒருவனைச் சுட்டிக் காட்டுகிறது. அதனால் இதற்கு ஆங்கிலத்தில் Demonstrative Pronoun என்று பெயர். इदम् என்பதும் அருகிலுள்ள ஒருவனைக் காட்டு கின்றது. ஆனால் एतद् என்பதோ மிகவும் அருகிலுள்ள ஒருவனையே சுட்டிக் காட்டும் இது समीपतरवर्ति चैतदो रूपम् என்பதால் விளங்குகிறது. இதன் முதல் வேற்றுமை ஒருமை एषः மற்ற வேற்றுமைகளில் एष என்பது एत என்று மாறுகிறது. अ என்ற எழுத்தில் முடியும் ஆண்பால் ஸர்வநாம சப்தங்களைப் போலவே மற்ற வேற்றுமைகளில் இதற்கு ரூபங்கள் வருகின்றன. एत என்பதற்குப் பதிலாக இரண்டாம் வேற்றுமையிலும், மூன்றும் வேற்றுமை ஒருமையிலும், ஆரும் வேற்றுமை ஏழாம் வேற்றுமை இருமைகளிலும் இதற்கு மாற்று ரூபங்கள் வருகின்றன. இந்த மாற்று ரூபங்கள் அன்வாதேசத்தில் தான் வருகின்றன. இதைப் பாணினி மஹர்ஷியின் "द्वितीयाटोस्स्वेनः" என்ற சூத்ரம் விளக்குகின்றது.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

உதாரணங்கள்

कस्य एते पुत्राः ! - இவர்கள் யாருடைய பிள்ளைகள்?

एतेषां यद्यदिष्टं तत् क्रियताम् । - இவர்களுக்கு என்ன என்ன விருப்பமோ அது செய்யப்பட்டும்.

स एव एष प्रदेशः यत्र अहं पुरा स्वर्णमृगं अपश्यम् । - எங்கு நான் முன்பு தங்க மானைப் பார்த்தேனே அதுதான் இந்த இடம்.

एतेन विवादेन अलम् । - இந்த விவாதம் போதும்.

एतस्मै बालकाय पञ्च पुस्तकानि यच्छ । - இந்தப் பையனுக்கு ஐந்துப் புத்தகங்கள் கொடு.

एतस्माद् गिरेः गङ्गा प्रवहति । - இந்த மலையிலிருந்து கங்கை பெருகுகிறது.

एतस्य अधिपतिः पर्याप्तम् आहारमपि न यच्छति । - இதனுடைய எஜமானன் போதுமான உணவுகூடக் கொடுக்கிறதில்லை.

एतान् मम सुतान् पश्य । - இந்த என்னுடைய பிள்ளைகளைப் பார்.

एतेषु बालकेषु कः श्रेष्ठः । - இந்த மாணவர்களில் யார் சிறந்தவன்?

विद्याधनं सर्वधनप्रधानम् - கல்விச் செல்வம் எல்லாச் செல்வங்களிலும் சிறந்தது.

परमेश्वरेण जगति समुत्पादितेषु सर्वद्रव्येषु विद्या एव सर्वश्रेष्ठं द्रव्यम् । - பரமேச்வரனால் உலகத்தில் படைக்கப்பட்ட எல்லாப் பொருள்களிலும் கல்வியே மிகச் சிறந்த பொருள்.

विद्याद्रव्येण विहीनः यः मानवः अस्ति सः असभ्यः, मूर्खः, ग्रामीणः इति कथ्यते । - கல்விச் செல்வமின்றி எந்த மனிதன் இருக்கிறானே அவன் அஸப்யன், முட்டாள், பட்டிக்காட்டான் என்று சொல்லப்படுகிறான்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

अनेन विना यथा पशुः धर्माधर्मयोः विचारं कर्तुं न प्रभवति तथा एव मानवः अपि विद्यया विना पुण्यापुण्ययोः कर्तव्याकर्तव्ययोः विचारं कर्तुं न पारयति। - இது இல்லாமல் எப்படி மிருகம் தர்மம் அதர்மம் இவைகளை யோசிக்கமுடியாதோ அதுபோலவே மனிதனும் படிப்பில்லாமல் புண்யம், பாபம், செய்யத் தகுந்தது, செய்யத்தகாதது இவைகளைப் பற்றி யோசிக்கச் சக்தியற்றவனாகிறான்.

विद्याविहीनः मानवः अन्धः एव निगद्यते - கல்வியில்லாத மனிதன் குருடன் என்றே சொல்லப்படுகிறான்.

उक्तं च - சொல்லப்பட்டும் இருக்கிறது.

इदमन्धं तमः कृत्स्नं जायेत भुवनत्रयम्।
यदि शब्दाह्वयं ज्योतिः आसंसारं न दीप्यते॥

शब्दाह्वयं ज्योतिः - சப்தம் என்று சொல்லப்படும் ஒளி, आसंसारं - உலகம் முழுவதும், न दीप्यते यदि - பிரகாசியாவிடில், इदं कृत्स्नं भुवनत्रयं = இந்த மூவுலகம் முழுவதும், अन्धं तमः - மையிருட்டாக, जायेत - ஆகிவிடும்.

अत्र शब्दाह्वयं ज्योतिः विद्या एव - இங்கு சப்தம் என்ற ஒளி என்பது கல்விதான்

यदि नाम शब्दाह्वयं ज्योतिः अस्मिन् जगति न भवेत् तर्हि जगदिदमखिलम् अपि अन्धकारावृतं भविष्यति। - சப்தமென்ற ஒளி இவ்வுலகின் கண் இல்லாவிடில் இவ்வுலகனைத்தும் இருள் சூழ்ந்ததாகிவிடும்.

विद्यया एव अस्य जगतः यावज्ज्ञेयं तत्त्वं तावदखिलमपि संप्रकाश्यते - கல்வியால்தான் இவ்வுலகில் அறியப்பட வேண்டிய பொருளனைத்தும் நன்கு வெளிப்படுத்தப்படுகிறது.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

यत्कार्यमन्येन द्रविणादिना अपि न साध्यते तत्कार्यं विद्याद्रविणेन अनायासेन साध्यते।

எந்தக் காரியம் பணம் முதலியவற்றுல் கூட செய்ய முடிகின்றதில்லையோ அந்தக் காரியம் கல்விச் செல்வத்தினுல் கஷ்டமில்லாமல் செய்யப்படுகின்றது.

अत एव विद्याधनस्य सर्वेतरधनेभ्यः प्रधानता उक्ता कविभिः।- அதனுல்தான் கவிகளால் கல்விச் செல்வத்திற்கு மற்ற செல்வங்களைக் காட்டிலும் சிறப்புக் கூறப்பட்டுள்ளது.

तथा हि - विद्याधनं सर्वधनप्रधानम्। - எப்படியெனில் - கல்விச் செல்வம் எல்லாச் செல்வங்களிலும் சிறந்தது.

इयं च विद्याधनस्य सर्वधनप्रधानता यदन्यानि धनानि व्ययीकृतानि क्षयं यान्ति, किन्तु विद्याधनं, व्ययेन संवर्धते। - மேலும் கல்விச் செல்வத்தின் மேன்மை என்னவெனில் மற்ற செல்வங்கள் செலவு செய்யப்பட்டவுடன் குறைந்து விடுகின்றன. ஆனுல் கல்விச் செல்வம் செலவு செய்வதால் மேலும் வளர்கின்றது.

तथा चोक्तं कविभिः - அவ்வாறு கவிகளால் கூறப் பட்டுள்ளது.

अपूर्वः कोऽपि कोशोऽयं विद्यते तव भारति।
व्ययतो वृद्धिमायाति क्षयमायाति सञ्चयात्॥

Center for Shaiva Studies, Pondicherry Collection

